# வாழ்வியல் இலக்கியப் பொழில்
# முதலாம் ஆண்டுவிழா மலர்



வாழ்வியல் இலக்கியப் பொழில்
சிங்கப்பூர்

**வாழ்வியல் இலக்கியப் பொழில்**

க

2017-2018

ஆண்டுவிழா சிறக்க வாழ்த்துகிறோம்

*With Best Complements*

# Y.SHAHUL HAMEED

## GLASS & FRAME MAKERS

57,Kerbau Road, Singapore 219181 Tel: 6294 7687 Fax : 6294 7683

e-mail" hameedaglass@yahoo.com.sg/website: www.hameedglass.com.sg

**Like us on FACEBOOK**

எங்களிடம் அனைத்து வகை சமய & கலை படங்கள் உள்ளன. உங்கள் தேவைக்கேற்ப அழகிய பிரேம்கள் செய்து தரப்படும்.

We specialise in all kinds of picture framing, general glasses,table glasses, mirrors, Indian religious pictures & arts,

வாழ்வியல் இலக்கியப் பொழில்
சிங்கப்பூர்

ஆண்டுவிழா சிறக்க வாழ்த்துகிறோம்

*With Best Complements*

# Selvi

**Store Trading Pte Ltd**

மொத்த வியாபாரம்.

(BR&GSTNO 200602055-K)
#5 KERBAU ROAD
SINGAPORE 219144
Tel : 6292 9153, 6392 3927
Fax : 6295 5285

Email : selvistore@selvionline.com | www.selvionline.com

# வாழ்வியல் இலக்கியப் பொழில்
# முதலாம் ஆண்டுவிழா மலர்

க

2017-2018


தொகுப்பு:

**பாவலர் எல்ல. கிருஷ்ணமூர்த்தி**

**முனைவர் தேன்மொழியாள் ஜெ. சின்னப்பா**

**திரு. ச.குமரேசன்**



வெளியீடு:

**வாழ்வியல் இலக்கியப் பொழில்**

Life Literary Centre

## JJ PUBLICATIONS

EVERGREEN PARK, #09-09,

31 Hougang Ave 7, SINGAPORE - 538800

Tel. 6640 7064 HP. 9228 8544

Email: ilakkiyapozhil@gmail.com

Blog: www.ilakkiyapozhil.blogspot.com

நூல் விவரக் குறிப்பு

# வாழ்வியல் இலக்கியப் பொழில்
# முதலாம் ஆண்டுவிழா மலர்

# LIFE LITERARY CENTRE
# FIRST ANNIVERSARY MAGAZINE

Compiled and Edited by
**E. KRISHNAMURTHY**
**Dr. THENMOZHIYAL J. CHINNAPPA**
**S. KUMARESAN**

பதிப்பு: அக்டோபர் 2018
பக்கங்கள்: 72
ISBN : 978-981-11-9056-8
அளவு: : 24 செ.மீ x 18 செ.மீ

வடிவமைப்பு - அச்சிடல்
**சத்யன் லே-அவுட்**
சென்னை - 600 005.

வெளியீடு
**வாழ்வியல் இலக்கியப் பொழில்**
**ஜெ ஜெ பதிப்பகம்**
**JJ PUBLICATIONS**
EVERGREEN PARK, #09-09,
31 Hougang Ave 7, SINGAPORE - 538800
Tel. 6640 7064 HP. 9228 8544

Copy Right
**LIFE LITERARY CENTRE**
Singapore

# வாழ்வியல் இலக்கியப் பொழில் - செயலவை



**எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
(தலைவர்)



**கோ.மணிமாறன்**
(துணைத் தலைவர்)



**முத்தழகு மெய்யப்பன்**
(செயலாளர்)



**கோமதி**
(துணைச் செயலாளர்)



**முனைவர் தேன்மொழியாள்**
(பொருளாளர்)



**துளசிமணி**
(துணைப் பொருளாளர்)



**மா.உலகப்பன்**
(உறுப்பினர்)



**முனைவர் இராஜி சீனிவாசன்**
(உறுப்பினர்)



**புவனேஸ்வரி இராசா**
(உறுப்பினர்)



**க.சுரேஷ்பாபு**
(உறுப்பினர்)



**ஜெயப்ரியாஶ்ரீராகவன்**
(உறுப்பினர்)



**பொ.கண்ணன்**
(உறுப்பினர்)



**ப.கலியபெருமாள்**
(உறுப்பினர்)



**மருத்துவர் அன்னபூரணி**
(உறுப்பினர்)

# வாழ்வியல் இலக்கியப் பொழில் - புரவலர்கள்



கவிஞர் முத்து.இராஜசேகரன்



கவிஞர் பி.மதியழகன்



பொறியாளர் ச.குமரேசன்



பொறியாளர் இரவீந்திரன்



பொறியாளர் பவித்ரா கண்ணன்



பொறியாளர் வை.சத்தியமூர்த்தி



பொறியாளர் சி.இரவிக்குமார்



பொறியாளர் கு. சத்தியமூர்த்தி



பொறியாளர் வினேஷ் மனோ



பொறியாளர் ஏழுமலை குமரன்



# தேடலில் கண்டப் பொழில்

**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
தலைவர், வாழ்வியல் இலக்கியப் பொழில்,
சிங்கப்பூர்

எண்ணற்றத் தமிழ்ச் சான்றோர்கள் வாழும் சிங்கப்பூரில் ஏனிந்த ஏக்கம்? தமிழ்மேல் இத்தனை மயக்கம். சிங்கப்பூரில் உள்ள தமிழமைப்புகள் பல்வேறு வழிகளில் தமிழ்ப்பணியைச் செய்து வருகின்றன. 2015 ஆண்டு இறுதி முதல், நான் பல்வேறு அமைப்புகளின் மாதாந்திர நிகழ்ச்சிகளுக்குச் சென்று வாரயிறுதி நாட்களைக் கழித்த போதும் ஏதோவொரு வெற்றிடம் இருப்பதாக உணர்ந்ததுண்டு. சிங்கப்பூர் படைப்பாளிகள் கவிதை, சிறுகதை முதலியவற்றில் கவனம் செலுத்தியிருந்த போதும் வெகுசில நிகழ்ச்சிகளில் மட்டுமே பண்டையத் தமிழ் மற்றும் சங்க இலக்கியம் சார்ந்த செய்திகள் பகிர்ந்துகொள்வதை அறிகிறேன்.

செம்மொழியாம் தமிழ்மொழியின் வளந்தனை அறிய ஆவல் ஏற்பட்டது. தமிழ்ச் சான்றோர்களிடமும் சில அமைப்புகளின் தலைவர்களிடமும் அத்தகைய ஆவலைப் பற்றிக் கூறிய போது, உலகில் மாற்றம் என்பது தவிர்க்க முடியாதவொன்று, காலத்திற்கேற்ப நம்மை மாற்றிக்கொள்ளவே சூழ்நிலைகள் பல நிலவி வருவதாகக் கூறினர்.

ஒரு குறிப்பிட்டத் தேடலில் சங்க இலக்கியத்தின் மீதும் இனம் புரியாத ஈர்ப்பும் வந்தது. இவையெல்லாவற்றிற்கும் காரணம், இருபத்தைந்தாண்டு காலமாக அவ்வப்போது எழுந்த எண்ணவோட்டத்தை குறிப்பேடுகளில் குறிப்புகளாக குறித்தும் சேகரித்தும் வைத்திருந்த சமயமது. அந்த நேரத்தில் அறிமுகமானவர் புலவர் அ.பொன்னையன் அவர்கள். இலக்கணங்களிலும் காப்பியங்கள் இயற்றுவதிலும் வல்லவர். குறிப்பேடுகளில் இருந்த கவிதைகளையும் கதைகளையும் படித்துவிட்டு அவற்றைப் புத்தகமாக்கச் சொன்னவர், ஆழ்ந்த பல கருத்துகளும் அழகியத் தமிழ்ச் சொல்லாடலும் இசையூட்டும் இயைபும் அமைந்த புதுக்கவிதையாகவும் வசனக்கவிதையாகவும் இருப்பதாக வெகுவாகப் பாராட்டினார். மரபுப்படி இலக்கணம் கற்றுப் பாக்களை இயற்றும் ஆற்றல் பெற்ற பின்னரே இவ்வகை எழுத்துக்கள் முறையாக வெளியிட வேண்டும் என்று மனதில் ஆழமாகப் பதிந்தது. புலவர் அவர்கள் யாப்பிலக்கண அறிமுகப் பாடங்களை நடத்தினார். புலவர் குழந்தை அவர்கள் இயற்றிய 'யாப்பதிகாரம்' என்ற நூலை, வாங்கிப் பயிற்சி பெற சொன்னார். தொடர்ந்து 'தொடையதிகாரம்', 'யாப்பறிந்து பாப்புனைய...' என்னும் நூல்களும் கற்க, பாவியற்றுவதில் துணிவு வந்தது.

தொடர்ந்த ஆர்வத்தால், கவிமாலை என்ற அமைப்பு நடத்தும் மாதாந்திர கவிதைப்போட்டியில் பங்கெடுத்து பல பரிசுகளைப் பெறவும் வழிவகை செய்தது. மாதமொரு யாப்பிலக்கணம் என தீர்மானித்துக்கொண்டு படிப்படியாகப் பலவித பாவினங்களில், துணிந்து பாக்கள் இயற்றவும் சூழ்நிலைகள் உருவாகின.

காலம் கடந்து செல்லச்செல்ல பல்வேறு பாக்கள் இயற்றியப் பின்னர், கற்றறிந்த தமிழ்ச்சொற்களையே மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்படுவதாக உணர்ந்து, தமிழில் உள்ள பற்பல நிகண்டுகளைத் (dictionary) தேட வேண்டியச் சூழல் ஏற்பட்டது.

சொற்களின் பயன்பாட்டை முழுமையாக அறிய சங்க இலக்கிய மூல நூல்களையும் உரை நூல்களையும் கற்றறிய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டபோது தான் தமிழின் தொன்மையை மெல்ல மெல்ல உணர்ந்து, ஆழம் செல்ல வாய்ப்பாக அமைந்தது. சமீப காலத்தில் இறக்குமதியாகிக் கொண்டிருக்கும் துளிப்பா வடிவம், நவீனம், பின் நவீனம் போன்றவற்றை ஒருபுறம் நிறுத்திவிட்டு தமிழில் உள்ள பெரும்பாண்மையானப் பாவினங்களை அட்டவணைப்படுத்தி கற்க முயற்சி செய்தேன். அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் இயற்றிய திருவருட்பா ஆறாம் திருமுறையில் நாற்பது பாவினங்களில் எழுதியிருப்பதைக் கண்டு மனம் நெகிழ்ந்தேன்.

அறம் சார்ந்த சிந்தனைகள் ஒருபுறம்; புறம் விளக்கும் கொடை, வீரம், புகழ் போன்றவை மறுபுறம். தமிழ் இலக்கியத்தில் ஆழ்ந்து படிக்கப் படிக்க தமிழின் அழகும் மென்மையும் தேன்சுவை பாக்கள் அறிந்தபின், மெய்சிலிர்க்க வைத்தன.

தமிழ்ச் சாராத துறையில் பணி செய்தபோதும், கிடைக்கும் ஓய்வு நேரத்தைப் பயனதுள்ளதாக்க எழுந்த மோகம் இன்று இலக்கியம் கூறும் நன்னெறிகளைத் திரட்டி யாருக்கு எது தேவையென்பதை உணர்ந்து கொண்டு, அவை சார்ந்த தேடலின் போது நட்பு வட்டாரங்களில் கலந்துரையாடியதுண்டு. ஒரு காலகட்டத்தில் மாதாந்திர நிகழ்ச்சியாக வைத்து அதில் பல்வேறு இலக்கிய நூல்களைப் புரட்டவும் கருத்துகளைத் திரட்டவும் தேவையானவற்றைப் பகிர்ந்துகொள்ளவும் ஒரு களம் தேவைப்பட்டது.

அருகாமையில் உள்ள சிராங்கூன் சமூக மன்றத்தில் விருப்பத்தைக்கூறியதும், மனமுவந்து இடமளித்து ஒத்துழைப்பு தந்தனர். வாழ்வியல் இலக்கியப் பொழிலின் தொடக்கவிழா 11-11-2017 அன்று மிகவும் சிறப்பான முறையில் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைக்கப்பட்டது. இதுவே வாழ்வியல் இலக்கியப் பொழில் தோன்றிய வரலாறு.

15 முதல் 20 பேர் வரை அமரக் கூடிய வகுப்பறையைக் கேட்டிருந்தபோது, 30 பேர் அமரக்கூடிய அறையைக் கொடுத்தனர். தொடக்க விழாவில் 60 பேர் வருகைப்பதிவேட்டில் இடம் பெற்றிருக்கக் கண்டு, பொழிலின் குளிர்ச்சியும் மனநிறைவும் மிகுதியானது. மாணவர்கள் பெரியவர்கள் என யாவரும் சங்க இலக்கியப் பாடல்களையும் உரைகளையும் கற்றுணர்ந்து மேடையில் தமக்குத் தெரிந்த நடையில் படைக்கலாம். கடந்த சில மாதங்களுக்கு முன்பு அறிமுகமான “வேரும் விழுதும்” என்ற அங்கம் சிறப்பான முறையில் வரவேற்பைப் பெற்று வருகிறது. பிள்ளைகளை மேடையேற்றிவிட்டு ஒதுங்கி நின்ற பெற்றோர்களும் தம் குழந்தையோடு சங்க இலக்கியம் சார்ந்த உரையாடல்களை நிகழ்த்த மேடையேற்றுவதில் வெற்றி கண்டுள்ளது என்றால் அது மிகையல்ல.

மேடையில் இதுவரை இனியவை நாற்பது, ஆசாரக்கோவை, ஏலாதி, சிறுபஞ்சமூலம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, திருக்குறள், நாலடியார், முதுமொழிக்காஞ்சி, பழமொழி நானூறு, பட்டினப்பாலை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, மூதுரை, நல்வழி, விவேக சிந்தாமணி முதலிய நூல்களில் இருந்து உரைகள் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எழில் நிறைந்த பொழிலில் தமிழ்ச்சுவையைப் பருகியும், தமிழ்மணத்தை நுகர்ந்தும், நிகழ்ச்சியில் யாவரும் அரிய நல்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தம் வாழ்வில் உயர்நிலையை அடையலாம்.

தாமாக முன்வந்து மாதாந்திர நிகழ்ச்சிகளில் 'சித்த மருத்துவம்' மற்றும் 'இயன்முறை சிகிச்சை (Physiotherapy)' படைக்கும் மருத்துவ நிபுணர்கள் வாழ்வியல் இலக்கியப் பொழிலில் பங்கெடுத்து வருவது சிறப்பாகும்.

இன்பத் தமிழைப் பருக !
இலக்கியப் பொழிலுக்கு வருக !

**சிங்கப்பூர்**
**06-09-2018**

நன்றியுடன்...

**பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி**
தலைவர்,
வாழ்வியல் இலக்கியப் பொழில்



# வாழ்த்துரை

**டாக்டர் சுப.திண்ணப்பன்**
சார்புநிலைப் பேராசிரியர்
சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக்கழகம்

சிங்கப்பூர் சிராங்கூன் சமூக மன்றத்தின் சார்பில் “வாழ்வியல் இலக்கியப் பொழில்” என்னும் அமைப்பு இங்குள்ள இளஞ்சிறார்கள், இளையர்கள், குடுபத்தினர் ஆகியோர்க்கு எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய மேற்கணக்கு நூல்களையும் திருக்குறள் முதலிய பதினெண்கீழ்கணக்கு நூல்களையும் பாரதி, பாரதிதாசன் பாடல்களையும் அறிமுகப்படுத்தும் உயரிய நோக்கத்துடன் சென்ற ஓராண்டாக மாதந்தோறும் நிகழ்ச்சிகள் நடத்திவரும் செய்தி அறிந்து பெருமகிழ்ச்சி அடைந்தேன். இதன் தொடர்பான வலைப்பக்கம், முகநூல் முதலிய தொழில்நுட்பச் செயல்பாடுகளையும் கண்டு அகமகிழ்வு மிகக் கொண்டேன். இவ்வமைப்பினை இயக்கும் தலைவர் பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்திக்கு என் பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

“இலக்கியம் என்பது வாழ்க்கையின் திறனாய்வு” என்று கூறுவார் தாமஸ் ஆர்னால்டு, தமிழர்கள் தொன்றுதொட்டு வாழ்க்கையைத் திறனாய்வு செய்து பலவகையாகப் பகுத்தும் தொகுத்தும் பார்த்து இலக்கியங்களை இயற்றியுள்ளனர். தொல்காப்பியர் முதலான சங்க இலக்கியப் புலவர்கள் வாழ்க்கையை அகம், புறம் எனப் பகுத்துப் பார்த்தனர். அகம் என்பது உள்ளத்தையும் இல்லத்தையும் உணர்த்தும் ஒரு சொல். எனவே உள்ளம் ஒன்றுபட்ட காதல் வாழ்வையும் இல்லற நெறியாகிய கற்பு வாழ்வையும் அகமாக ஆராய்ந்தனர். இவற்றைத் தவிர்த்த ஏனைய போர், வீரம், அரசியல், கொடை, அறம் முதலியவற்றைப் புறம் எனப் பகுத்துப் பார்த்தனர். அகம், புறம் இரண்டு பற்றிப் பாடல்கள் இயற்றினர்.

சங்க காலத்திற்கு அடுத்து வந்த திருவள்ளுவரோ வாழ்க்கையை அறம், பொருள், இன்பம் என முப்பாலாகப் பிரித்து ஆராய்ந்து இவற்றிற்குப் புதுப் பொருளும் கண்டு புரட்சி செய்தார். “மனத்துக்கண் மாசிலனாதலே அறம்” என இலக்கணம் வகுத்து இல்லறம், துறவறம் எனப் பகுத்துப் பேசினார். பொருள் என்பதற்குப் படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் ஆறு உறுப்புகளுடன் இணைந்த அரச இயல் எனப்புது விளக்கம் தந்தார். இவ்வாறே இன்பத்தை “மலரினும் மெல்லிது காமம்” எனக் கூறிக் களவு, கற்பு என முன்னோர் கருத்தைப் பொன்னேபோல் போற்றிப் புதுமைகள் சேர்த்துப் புகன்றார்.

இடைக்காலத்தில் வந்த பக்தி இலக்கியப் பாவலர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என வாழ்வியலை இறை உணர்வுடன் இணைத்து நான்கு கூறுகளாகக் கண்டு பண்ணிசைப் பாடல்களைப் பாடிச் சென்றனர்.

இக்காலப் புலவர்கள் வாழ்வியலில் மனிதநேயத்துக்கு மதிப்பளித்துப் பொதுவுடைமை, அறிவியல், அரசியல், மொழிப்பற்று முதலிய பொருள்களை உள்ளடக்கிப் பாடி வருகின்றனர்.

காலத்துக்கேற்ற இலக்கிய வடிவங்களும் அவ்வப்போது மாறி வந்துள்ள காட்சியையும் காண முடிகிறது.

இலக்கியம் உள்ளடக்கத்தால் மட்டுமன்றி உணர்த்தும் நெறியாலும் உயர்வு பெறுகிறது. உணர்த்தும் நெறி என்பது உணர்ச்சி, கற்பனை, உவமை, உருவகம் முதலியவற்றைக் குறிக்கும்.

உள்ளடக்கம், உருவம், உணர்த்தும் நெறிமுறை மூன்றும் இணைந்து உருவாகும்போதே இலக்கியம் எழில் காட்டும் பொழிலாகிறது. இத்தகைய பொழிலில் இன்புறும் இயல்பைச் சிங்கையில் பலர்க்கும் ஈத்துவக்கும் “வாழ்வியல் இலக்கியப் பொழில்” என்னும் அமைப்பு ஒல்லும் வகையான் எல்லாம் வெல்லும் வழியில் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என விழைந்து வாழ்த்துகிறேன். இப்பொழிலில் பற்பல ஆண்டு மலர்கள் பூத்துக் குலுங்கட்டும். பலரும் இலக்கிய மணம் நுகரட்டும்.

**சிங்கப்பூர்**
**11-09-2018**

**சுப.திண்ணப்பன்**

# வாழ்த்துச் செய்தி



**தமிழறிஞர் முனைவர் மா. இராஜிக்கண்ணு**
தமிழ் விரிவுரையாளர் (பகுதி நேரம்)
சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக் கழகம்
சிங்கப்பூர்

*ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி*
*மூங்கில்போல் முசியாமல் வாழும்*

தகைமை பெற்றது நம் தாய்மொழி. தமிழ், சமற்கிருதம், சீனம், ஹீப்ரு, கிரேக்கம், இலத்தீன், எபிரேயம் ஆகிய ஏழு மொழிகளும் தொன்மை வாய்ந்த மொழிகள் எனப் புகழப்படுகின்றன. இவற்றுள் உயர்தனிச் செம்மொழிக்குரிய சிறப்பினைத் தமிழ்மொழி பெற்று செம்மொழித் தமிழ் எனும் உயர்நிலையை அடைந்துள்ளது. 'உன் சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே' எனப் பேராசிரியர் பெ சுந்தரம்பிள்ளை அவர்கள் தமிழினை வியந்து பாராட்டிப் போந்தார்.

தமிழிலிருந்து தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகள் கிளைத்தன என்பதை மொழிநூலாய்வாளர்கள் தம் ஆய்வின் துணைகொண்டு நிறுவியுள்ளனர். தமிழகத்தைப் பல்வேறு மொழியினர் ஆண்டகாலையும் தமிழ்மொழி அழியாது இன்றுவரை செம்மாந்து நிற்கிறது. அம்மொழியைப் பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பேணிவளர்க்கத் தலைப்பட்டுள்ளனர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் கணியன் பூங்குன்றனாரின் முதுமொழிக்கேற்ப வாழ்வியல் இலக்கியப் பொழில் மன்றம் ஓராண்டாய்ப் பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை நடாத்தி வெற்றிகண்டு வருவதை அறிந்து பூரிப்பு அடைகிறேன். பாவலர் எல்ல கிருட்டிணமூர்த்தி அவர்கள் தலைமையில் இயங்கும் இம்மன்றம் குடும்ப உறவு என்பதனைப் பொருண்மையாகக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியது. சிறுவர் முதல் பெரியோர் வரை தம் தகுதிக்கேற்பப் பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை நிகழ்த்தி வருகின்றனர். தித்திக்கும் தேன்தமிழில் பண்டைய இலக்கியக் கனிகளைப் பயின்று அவற்றின் சாற்றினைப் பிழிந்து அன்னையர் தருகின்றனர். அவர்தம் பிள்ளைகள் குறுநாடகங்களைச் சுவைபடப் படைத்து அவையோரின் பாராட்டுதலைப் பெறுகின்றனர். மாறுவேடத்தில் தோன்றி மாக்கவி பாரதி, திருநாவுக்கரசர், ஔவையார் முதலிய சான்றோரை நம் கண்முன் காட்டி களிநடம் புரிகின்றனர்.

அன்னையர் சிலர் பட்டிமன்றத்தில் பங்கேற்று பாங்குடன் சொல்லின் செல்வர்களாக விளங்குகின்றனர். தலைப்புக்கேற்ற வண்ணம் வழக்காடிய திறன் மெச்சத்தக்கது. மேலும் திருச்சிராப்பள்ளி உருமு தனலெட்சுமி கல்லூரிப் பேராசிரியர் முனைவர் மு அமிர்தகடேஸ்வரர் அவர்களின் சொற்பொழிவு வாழ்வியல் இலக்கியப் பொழிலை அணிசெய்தது.

பல்வேறு செவிநுகர் கனிகளைத் தாங்கி மலர்ந்துவரும் வாழ்வியல் இலக்கியப் பொழில் ஆல்போல் தழைத்து வளர என் வாழ்த்தினை இயம்புவதில் இறும்பூது எய்துகிறேன். இலக்கியப் பொழிலைப் பேணிக் காத்துவரும் பாவலர் எல்ல. கிருட்டிணமூர்த்தி அவர்களின் தமிழ்ப்பணி போற்றுதற்குரியது. பொழில் நாளும் வளர்ந்தோங்க என் வாழ்த்துகள் உரியதாகுக.

**சிங்கப்பூர்** **மா. இராஜிக்கண்ணு**
**23-09-2018**

## 11-11-2017 அன்று தொடக்க விழாவிலிருந்து சில காட்சிகள்.....



தொடக்க விழாவில் கலந்துகொண்ட ஒரு பகுதியினர்



தொடக்க விழாவில் கலந்துகொண்ட மேலும் ஒரு பகுதியினர்



ரிஷி கணேஷ்

மேலும் சில காட்சிகள்... பக்கம் 16



ரக்ஷிகா



# வாழ்த்துரை

**முனைவர் மு. இளங்கோவன்**
செயலளார்
உலகத் தொல்காப்பிய மன்றம்
புதுச்சேரி - 605 003

தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை நல்கும் நாடுகளுள் சிங்கப்பூர் முதன்மையான நாடாகும். சற்றொப்ப இருபதாண்டுகளாக இந்நாட்டுடனும், இந்த நாட்டில் வாழும் அறிஞர் பெருமக்களுடனும், பல்வேறு தமிழமைப்புகளுடனும் நல்ல தொடர்பில் உள்ளேன். சிங்கப்பூரில் நடைபெற்ற பல்வேறு இலக்கிய நிகழ்வுகளில் கலந்துகொண்டு உரையாற்றும் வாய்ப்பினையும் பெற்றுள்ளேன். அவ்வகையில் வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பின் அழைப்பில் ஒருமுறை கலந்துகொண்டு அன்பர்களுடன் உரையாடும் பெரும் பேற்றினைப் பெற்றுள்ளேன். இந்த அமைப்பைக் கட்டியெழுப்பிக் காத்துப் போற்றும் நண்பர் எல்ல. கிருட்டினமூர்த்தி அவர்கள் அடிப்படையில் பொறியாளராகப் பணியாற்றினாலும் அவர் தமிழ் மரபு இலக்கணம் அறிந்த பெருமகனார் ஆவார்.

சிங்கப்பூரில் வாழும் தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கியச் சிறப்பு, தமிழர் கலைகளை அறிமுகம் செய்யும் பெருவிருப்பில் பல்வேறு இலக்கிய நிகழ்வுகளை, இவர் தோற்றுவித்த வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பு ஒருங்கிணைத்து நடத்தி வருவதை நேரிலும், அன்பர்கள் வழியும் அறிந்து மகிழ்கின்றேன். எல்ல. கிருட்டினமூர்த்தி அவர்கள் தாம் மட்டும் தமிழ்ப்பணியில் முன்னிற்காமல் தம் குடும்பத்தினரையும் இப்பணியில் ஆர்வமுடன் இணைத்துள்ளமையை இங்குக் குறிப்பிட விரும்புகின்றேன். தமிழ்ப்பணியில் முன்னிற்கும் நண்பர்கள் தனித்துத் தம்மால் இயன்ற பணிகளைச் செய்வதை வழக்கமாக உலகியலில் காண்கின்றோம். குடும்பத்தினர் இதனை விரும்பாமல் இருப்பார்கள். அவ்வாறு இல்லாமல் பாவலர் எல்ல. கிருட்டினமூர்த்தி அவர்களின் துணைவியாரும், அவர்தம் அருமைத் திருமகளாரும் தங்கள் ஓய்வுநேரங்களில் தமிழோடு நிற்கின்றமை நமக்கெல்லாம் முன்மாதிரி செயல்பாடுகளாகும்.

'வாழ்வியல் இலக்கியப் பொழில்' கூடிக்கலையும் நிகழ்வுகளை நடத்தும் தொழில்முறை இலக்கிய அமைப்பு அன்று. அடுத்த தலைமுறையை உருவாக்கும் அரும்பணியைச் செய்யும் பாசறை எனில் பொருந்தும். இந்த அமைப்பின் நிகழ்வுகளில் பங்கேற்கும் சிறுவர்கள் ஆர்வமுடன் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதுடன் தம் பெற்றோர்களையும் அழைத்துவந்து கலந்துகொள்ளச் செய்வது போற்றுதலுக்கு உரிய ஒன்றாகும். புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தங்கள் குழந்தைகளைத் தமிழ்ப்பண்பாட்டுடன் வளர்ப்பதற்குப் பெரும்பாடுபடும் நிலைகளை நான் நன்கு அறிவேன்.

சிங்கப்பூர் நாட்டின் செழுமையான வாழ்க்கை முறையில் தங்கள் அடையாளங்களை அறிந்துகொள்ளவும், தங்கள் முன்னோர் பெருமைகளைத் தெரிந்துகொள்ளவும், கலை இலக்கியச் சிறப்புகளைப் பயிலவும் வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பு தொடர்ந்து தொண்டாற்றி வருவதற்கு என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பு உயர்நிலைப் பணிகளைத் தொடர்ந்து செய்யவும், இதனால் அறிவார்ந்த நல்ல குழந்தைகள் வளர்ச்சிபெறவும் தொடர்ந்து செயல்படும் இவ்வமைப்புக்கும், தேனீக்களாகத் திரண்டு அறிவுழைப்பு நல்கும் தோழர்களுக்கும் என் வணக்கமும் வாழ்த்துகளும்,

பணிவுடன்

**மு. இளங்கோவன்**

15.09.2018

muelangovan@gmail.com



# வாழ்த்துப்பா

**கவிமாமணி வீரபாண்டியத் தென்னவன்**
தலைவர், மாமதுரை கவிஞர் பேரவை
மதுரை, தமிழ்நாடு

சிங்கப் பூரில் உள்ள
செந்தமிழ் இளையோர் வெல்லச்
சங்க இலக்கியம் உரைத்திடும்
சரியானப் பாதை சொல்லத்
தங்களின் முயற்சி எல்லாம்
தாய்வழிப் பயிற்சிவழி செல்லும்
அங்கமாய் வலர்ந்து வாழ்க
அம்பிகை அருளால் வெல்கவே !

திங்கள் தோறும் நல்விழா
திகழ்ந்திட மலர்ந்திடும் பொழிலே
மங்கல நடையது தொடர்ந்திட
மனங்களில் கடையதை விரித்திட
அங்குள அனைவரும் கலந்திட
அரசதன் உதவியும் கிடைத்திட
இங்குள்ளோர் வாழ்த்த வாழ்வியல்
இலக்கியப் பொழிலே வாழ்கவே !

ஆழ்கடல் தனையே தாண்டி
அன்புடன் தமிழை வேண்டிச்
சூழ்நிலை முறைகள் செய்யும்
சங்க இலக்கியம் உரைத்தே
வாழ்வியல் அறங்கள் காட்டும்
வரம்நிறை நெறிகள் பூட்டும்
வாழ்வியல் இலக்கியப் பொழிலே
வாழ்வாங்கு வாழ்கவே எழிலே !

மதுரை
01-09-2018

கவிமாமணி வீரபாண்டியத் தென்னவன்



# வாழ்த்தகவல்

**முனைவர் மு. அமிர்தகடேஸ்வரர்**
உதவிப் பேராசிரியர், உருமு தனலெட்சுமி கல்லூரி,
காட்டூர், திருச்சிராப்பள்ளி

பொதிகைப் பிறந்த தமிழைப் போற்றி
மதித்த மாந்தர் சீர்புகழ் உற்றார்
தென்றல் உண்ட உடல்துள் ளளேபோல
தென்தமிழ் உண்ட உயிரினி மையுறும்
அன்னை யூட்டும் பாலுடல் வளர்க்கும்
என்னுயிர்த் தமிழ்முப் பாலுயிர் வளர்க்கும்
மலையிடை பிறந்தவள் இவளெந் நாளும்
அலைகடல் கடந்தே பாரா ளுகிறாள்
பாவலன் கிருட்டின மூர்த்தி உளமுற்று
காவலன் வாழ்வியல் இலக்கியப் பொழிலிலே
எழிலாய் அழகாய் தமிழாய் அமர்ந்தாள்
சின்னஞ் சிறாரும் பலர்,சிராங் கூனில்
குன்றாத் தமிழை ஆய்கின் றார்,பெரும்
இன்பத் தமிழ்த்தே னுண்டே மகிழ்கிறார்
பொய்யா மொழியினில் சிந்தை செல்வார்
பொய்யா உளமும் அறிவும் பெறுகிறார்
நாலடி பழமொழி நாநாற் பதுடன்
சாலவே திரிகடு கம்,பஞ் சமூலம்
எல்லாம் கசடற கற்கின் றாரவர்
எல்லாம் கற்ற வழிநிலைக் கொண்டார்
குன்றா வளம்பல பெற்றே நன்றும்
அறிவினில் அன்பைப் பொருந்திடும் பண்பிலே
அறிவான சிறாரெலாம் சிறந்தே ஓங்கவே
வாழ்வியல் தமிழ்ப்பொழி லாருழைக் கின்றார்
தாழ்விலாச் சிங்கைத் தமிழுயர்த் துகிறார்
அரிசிப் பொரியாம் தமிழ்ப்புதுக் கவிதை
பரிந்தும் படித்தா லுமதில் சத்தில்லை
கற்கண் டாம்,தமிழ் மரபுக் கவிதை
கற்கவே பழந்தமிழ் நூல்கள் கோடி
இயலாம் இசையாம் நாடக மாந்தமிழ்
இயல்பண் பெல்லாம் மலையரு வி,நீரென

தமிழ்,வாழ் வியல்,இலக் கியப்பொழில் தந்திடும்
தமிழமு தமமிழ்ந் தமிழ்ந்து கற்றிடவே
தமிழால் இங்கே மகிழ்ந்து,கூ டிடுவார்
சமயச் சழக்கைக் கடந்தே தமிழ்நூல்
சமர்த்தாய் அழகாய் மகிழ்வாய்ப் பயில்கிறார்
கேள்வியாம் அறிவினுக் குத்தமிழ் புசித்து
வேள்வியாய் வயிற்றிற் கொரு,சோ றிடுவார்
ஆளுந்தமிழ் மொழிக்கே சிராங்கூன் தலத்தே
நாளும்,தகை சால்,தொன் டாற்றி கலையாய்
ஆண்டு விழாகாண் தகைசால் சான்றீர்
ஞாயிறின் சுடராய்த் தமிழ்ப்பகை வென்றே
பாயிரு ளகற்றி தண்டமிழ் பொழிலாள்
அன்பரு ளறம்நனி வளர்த்தே
ஒண்புகழ் ஆலாய் அருகாய் வாழ்கவே!

திருச்சிராப்பள்ளி
15-09-2018

மு. அமிர்தகடேஸ்வரர்

**11-11-2017 அன்று தொடக்க விழாவிலிருந்து மேலும் சில காட்சிகள்.....**


வாழ்த்துப்பா கூறும் கவிஞர் முத்து.இராஜசேகரன்


பங்கேற்ற குழந்தைகளுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கி சிறப்பித்த போது


நெறியாளர்கள் அனுராதா சுரேஷ்பாபு மற்றும் பவித்ரா கண்ணன்


அறிமுகவுரை வழங்கும் தலைவர் பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி



# மகிழ்ச்சி

முத்தழகு மெய்யப்பன்

மனிதன் மகிழ்ச்சியாக வாழ முயற்சி செய்வது இயல்பு. “மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்” என்று வா(ளா)ழாதிருப்பவனால் எதை சாதிக்க முடியும்? துன்பம் அணுகாமல் நலமாய் நெடுங்காலம் வாழ உடலும் உள்ளமும் சீரான நிலையில் இருப்பது அவசியம்! மகிழ்ச்சியாய் வாழ இவைதான் இன்றியமையாத அடித்தளம்! அளவற்ற செல்வம் அடைந்தவனேயாயினும் ஏதேனும் ஒரு நோயின் தாக்கம் தன்னுள் இருக்குமேயாயின் நிலை தடுமாறி மன வேதனையாலும் மரண பயத்தாலும் வாடுகிறான். எனவே, நோய் நெருங்காத உடலும் சஞ்சலமற்ற உள்ளமும் பெற உடற்பயிற்சியும் யோகாப் பயிற்சியும் தினமும் குறைந்தது முப்பது நிமிடங்கள் செய்தல் நன்று! உண்டி குறைத்தல் பெண்டிற்கு மட்டுமல்ல அழகு, ஆண்களுக்கும் அவ்வாறே! ஆகவே அதிக உணவு உண்ணாதிருத்தல் உடலுக்கு உன்னத நிலை அளிக்கும்!

ஆரோக்கிய வாழ்க்கை முறையால் மிக மகிழ்ச்சியாக ஒவ்வொரு நாளையும் களிக்க இயலும், பயனடைய முடியும். ஆண்டுக்கொரு முறை மருத்துவபரிசோதனை செய்துகொள்ளல் நல்லது. “நேரம் எங்கே இருக்கிறது - உடல் பரிசோதனைக்குப் போவதற்கு; அப்படியே சென்றாலும் மருத்துவர் எதையாவது சொல்வார்; உடம்பில் உள்ள சிக்கல்கள் என்னவென்று தெரியாமல் இருப்பதே மேல்; நமக்கு ஏன் கவலை எல்லாம் கடவுள் பார்த்துக் கொள்வார்; அவருக்குத் தெரியும்” என்று அலட்சியமாய்ப் பொறுப்பற்று பேசுபவர்களும் உண்டு!

சித்திரம் வரைய நல்ல சுவர் வேண்டாமா? ஆரோக்கியமாய் மகிழ்வாய் வாழ வழிகள் இதோ:

1. கவனத்துடன் அளவாய் உண்ணுதல்.
2. முறையாக உடற்பயிற்சி, யோகா செய்தல்.
3. புகைக்காதிருத்தல்.
4. மன உளைச்சலை நெருங்கவிடாதிருத்தல்.

ஒவ்வொரு ஆண்டும் அடிப்படை மருத்துவப் பரிசோதனை செய்து முன்னெச்சரிக்கையுடன் இருத்தல் அவசியமாகும் .

மேற்கண்டவைகளால் அடையும் நன்மைகள்:

1. மாரடைப்பு, இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், புற்றுநோய் போன்றவைகளின் அபாயம் குறைகிறது.

2. உடல் உள்ளுரம் பெறும், தோற்றம் மெருகுடனும் தெம்புடனும் காணப்படும்.

3. மருத்துவத்திற்குச் செலவாகும் பணமும் நேரமும் வீணாவதைத் தவிர்க்கலாம்.

உடல் உள்ளுறுப்புகளின் இயக்க நிலையின் நிறை குறைகளை முன்பே அறியாமல் ஏதேனும் வியாதி வந்தபின்பு மருந்து எடுத்துச் சரியாக்க முயற்சி செய்வதைவிட, வருமுன் சரியான உணவு, உடற்பயிற்சி போன்றவைகளால் எச்சரிக்கையாக நம்மைக் காத்துக் கொள்தல் நன்று! “கண்பார்வை இழந்தபின் சூரிய நமஸ்காரம் செய்வதில் பலன் இல்லை“ என்பது அனைவரும் அறிந்த ஒரு எச்சரிக்கைக் கூற்று!

நோயற்ற வாழ்வுதான் மகிழ்ச்சியான நெடுங்கால நல்வாழ்வை மாந்தருக்கு நல்குமென்பதை நாம் அனைவரும் நினைவில் கொண்டு செயல்படுதல் நன்று!

சிங்கப்பூர்
15-09-2018

**முத்தழகு மெய்யப்பன்**

**09-12-2017 அன்று 2ஆவது சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....**



ஜீவஜோதிகா




இரண்டாவது சந்திப்பில் கலந்துகொண்ட ஒரு பகுதியினர்



அ.சுந்தர் மற்றும் அ.கிருஷ்ணன்

மேலும் சில காட்சிகள்..... பக்கம் 20



நீதி நூல் பயில் — புலவர் தீ.விஜயசுதா



# வாழ்த்துரை

**ஏ.பி.ராமன்**
மூத்த எழுத்தாளர் - பத்திரிக்கையாளர்

தமிழின் தொன்மை, தமிழரின் மேன்மை ஆகியவற்றை இன்று தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் பரப்பும் பெரும் பணியைச் செவ்வனே செய்து வருபவர்கள் தமிழர்கள். தமிழ் என் அடையாளம் என்று காட்டிக் கொள்ள அவர்களுக்குத் தாய் மொழி மிக மிகத் தேவையாகி இருந்து வருகின்றது. உலக நாடுகளில் புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்கள் தாய் நாட்டிலிருந்து தங்கள் மொழி, கலை, கலாச்சாரங்களையும் தூக்கிச் சுமந்தவர்கள். குடியேறிய நாடுகளின் அரசியல், மற்ற சூழல்களை அனுசரித்து, சென்ற இடங்களில் எல்லாம் மொழி, கலாச்சாரங்களைக் கட்டிக் காத்து வருகின்றனர்.

சிங்கப்பூரைப் பொறுத்தவரை தமிழ் ஓர் அதிகாரத்துவ மொழி. அதன் வளர்ச்சியில் அரசாங்கம் பெரும் கவனம் காட்டி வருகிறது. தமிழ் வளர்ச்சிக்கான அத்துணை வசதிகளும் இங்கே தரப்பட்டுள்ளன. பெரும்பான்மை மக்களின் மொழிகளுக்கிடையே நம் சிறுபான்மைத் தமிழுக்கு உரிய அந்தஸ்து தரப் பட்டிருப்பதை நாம் பெருமையாகக் கருதுகிறோம்.

சிங்கப்பூரில் இளையரிடை தமிழ் வளர்க்கும் பணியில் மற்ற பல கல்வித் துறை அமைப்புகளுடன் நம் சமுதாய அமைப்புகளும் ஒன்றிணைந்து செயல் படுகின்றன. ஒவ்வொரு வாரமும் தமிழ் சார்ந்த பல்வேறு நிகழ்வுகள் தீவெங்கும் திரளான மக்கள் பார்வையில் மேடை ஏறுகின்றன. இந் நிகழ்ச்சியின் பின்னணியில் இருப்பவர்கள், நாள் முழுவதும் உழைத்துப் பிழைக்கும் பலதிற ஊழியர்கள் என்பதை நாம் மறந்து விட இயலாது. இந் நிகழ்ச்சிகளை அமைப்புகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் படைக்கின்றன. மொழித் திறனை முன்னிறுத்துவது, இன்றைய இளைய சமுதாயம் உணரத் தகுந்த இலக்கிய இரசனைகளை உருவாக்குவது போன்ற செயல் திறன்களில் இவை வெற்றியும் கண்டு வருகின்றன.

அண்மையக் காலத்தில் இலக்கிய ஆர்வலர்களால் உருவாக்கப்பட்ட வாழ்வியல் இலக்கியப் பொழில் என்கிற அமைப்பு, முதலாம் ஆண்டு

விழாவை நோக்கிச் செல்வது அறிந்து மிக மகிழ்ச்சி அடைகிறேன். சங்க இலக்கியச் சுவையைப் பாலர் இரசனைக்கு எடுத்துச் செல்லும் இவர்களின் சீரிய நோக்கம் பாராட்டுக்குரியது. எழுத்துலகில் முன்பே அறிமுகமான பலர் நின்று நடத்தும் இவ்வியக்கம், அடுத்து வரும் ஆண்டுகளில் பல பெருஞ் சாதனைகளை நடத்தித் தர வாழ்த்துகிறேன்.

*இளையர் பணி - இறைவன் பணி!*
*தமிழ்ப் பணி - தமிழரை வாழ வைக்கும் பணி!*

சிங்கப்பூர்
08-09-2018

மூத்த எழுத்தாளர் - பத்திரிக்கையாளர்
**ஏ.பி.ராமன்**

## 09-12-2017 அன்று 2ஆவது சந்திப்பிலிருந்து மேலும் சில காட்சிகள்.....




ஆசாரக்கோவை வழங்கும் திருமதி பவித்ரா



பாட்டு இலக்கியம் — கவிஞர் பி.மதியழகன்




சிறப்புரை வழங்கும் நார்வேயிலிருந்து திரு அறவாழி, உடன் திரு மணிமாறன் அவர்கள்



தமிழில் பிறந்தநாள் வாழ்த்துப் பாடலோடு ஜீவஜோதிகாவின் பிறந்தநாள் விழாக் கொண்டாட்டம்



# வாழ்த்துரை

**புதுமைத்தேனீ மா. அன்பழகன்**
கவிமாலை காப்பாளர், சிங்கப்பூர்

கவிமாலைக் கவிஞர் தம்பி எல்ல. கிருஷ்ணமூர்த்தி மற்றும், அவரது இல்லத்தரசி ஆகியோரின் முன்னெடுப்பில் சில நண்பர்களையும் இணைத்துக்கொண்டு சிறப்பாக திங்கள் தோறும் தமிழ் இலக்கியம் சார்ந்த நிகழ்ச்சிகளைச் சிங்கப்பூரின் மையப்பகுதியான அங் மோ கியோ வட்டாரத்தில் நடத்துவதறிந்து மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.

சிங்கையில் பதிவு பெற்ற அமைப்புகள் நாற்பதுக்கும் அதிகமானத் தமிழ் அமைப்புகள் வெவ்வேறு கோணத்தில் நின்று தமிழர்க்கும், தமிழுக்கும் சேவை செய்து வருகின்றன. தங்கள் "வாழ்வியல் இலக்கியப் பொழில்" எனும் அமைப்பு பதிவு பெறாத அமைப்பாக இருந்தாலும் வேறு எந்த அமைப்புக்கும் இடையூறு இல்லாமல் தனித்து நிற்பதோடு வருகை புரிவோரும் மற்ற அமைப்புகளுக்குத் தொடர்பு இல்லாதவர்களாக இருப்பதை ஒரு முறை நேரிலேயே ஒரு நிகழ்வுக்கு வருகைபுரிந்ததன் வாயிலாக உணர்ந்தேன்.

சங்ககால இலக்கியத்தைப் பிஞ்சு உள்ளங்களுக்கு எடுத்துச் செல்கிறார்களே இது பொருந்துமா? பயனடைவார்களா? என்றெல்லாம் எண்ணியதுண்டு. ஆனால் சிறுவர்களாக இருந்தாலும் இளம் உள்ளங்களில் இப்போது விதைக்கும் அந்த விதைகள் இப்போது இல்லாவிட்டாலும் நாவினில் புரண்ட சங்கஇலக்கிய வரிகள் மீண்டும் எதிர்காலத்தில் வாசிக்கும்போது அவற்றை எளிமையாகப் புரிந்துகொள்ளவும், இலக்கியத்தின்பால் ஓர் ஈடுபாட்டை அதிகரித்துக்கொள்ளவும் பெரிதும் துணை நிற்கும் என்று பூரணமாக நம்புகிறேன்.

சிறுவர்கள் மட்டுமல்ல, பல இல்லத்தரசிகளும் நிகழ்ச்சிக்கு வருகிறார்கள்; பங்கெடுக்கிறார்கள். பங்கெடுக்க இசைவு தெரிவித்துவிட்டு அதற்கான தயாரிப்பில் ஈடுபடும்போது அவ்விலக்கியத்தை முதலில் அவர்கள் அறிந்துகொள்ளவும் வாய்ப்பாக அமைகிறது. எல்லோருக்கும் பரிசு கொடுப்பதன் மூலம் அச்சிறுவர்கள் ஒவ்வொருவரும் பெரிதும் ஊக்கமடைகிறார்கள்.

இந்நிகழ்ச்சி மூலம் முன் அறிமுகமில்லாத தமிழர்களின் குடும்ப ஒன்றுகூடலாகவும் அமைவதறிந்து பாராட்டுகிறேன். அதன்வழி ஒருவருக்கொருவர் பயனடையவும் ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கிறீர்கள் என்பதையும் அறிந்து தம்பி கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டுகிறேன்.

போதிக்கப்படும் நல்லுரைகள் இளம் வயதில் பசுமரத்தாணியாய் மனங்களில்

பதியவிடுவதால் எதிர்கால அறவழிச் சான்றோர்களை மறைமுகமாக இப்போதே உருவாக்கிவிடும் நற்செயலைச் செய்கிறீர்கள் என்பதை எண்ணும்போது உள்ளபடியே மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருக்கிறது.

இப்படியான செயற்பாடுகள் மூலம் ஓராண்டைக் கடந்து வந்துள்ளீர்கள் என்பதை உணர்ந்து உங்களையும், இந்த அமைப்பையும் மனதாரப் பாராட்டுகிறேன். எதிர்காலத்தில் இன்னும் பல நடைமுறைச் சாத்தியமான செயல்கள் மூலம் தமிழ், தமிழர்க்கானப் பணிகளைச் சிறப்பிக்க வாழ்த்துகிறேன்.

**சிங்கப்பூர்** **மா. அன்பழகன்**
**06-09-2018**

**26-11-2011 அன்று கிழக்கு கடற்கரை பூங்காவில் ஆலோசனைக்கூட்டம்...**



முதல் ஆலோசனக் கூட்டத்தின் ஒரு பகுதியாக சிறுவன் கிஷோர் பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது



சிறுவர்களின் ஒருமித்த பயணம்

**01-01-2018 அன்று கலந்துரையாடல் சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....**



புதுவை முனைவர் மு.இளங்கோவன் அவர்களுக்கு சிறப்பு செய்த போது



புதுவை முனைவர் மு.இளங்கோவன் அவர்களுடன்



# தாயுமானவள்

முனைவர் தேன்மொழியாள் ஜெ.சின்னப்பா

**அறிவே அருளே! நெறியே வரமே! தாயே தமிழே வாழி!**

ஒரு மனிதனின் மொழிக்கும் தனக்குமான உறவு தாய்க்கும் மகற்குமான தொப்புள் கொடியுறவு எனலாம். முதன்முதலாய் மொழியைக் கற்பிப்பவள் தாய், அதுவே தாய் மொழி; அந்த மொழியேத் தாயாகி நிற்கையில்...! ஆம் "தமிழ்" நமக்கெல்லாம் "தாயே"!

இனம், மொழி, இடம், சமயம், கலாச்சாரம் அனைத்தையும் கடந்து, காலத்தை வென்று, உலகம் வியக்க உயர்ந்து, தம் அரிய இலக்கண இலக்கியங்களாலும், அவை கூறும் மாறாப் பொதுமறைகளாலும், சகோதரத்துவம், மானுடம், இல்லறம், துறவறம், நல்லறம், மருத்துவம், உடல்நலம், மனநலம், வேளாண்மை, மேலாண்மை, பொருளாண்மை, அரசாண்மை, கட்டடம், கலை, இசை, வீரம், கல்வி, காதல், கருணை, ஆன்மீகம், தவம், முக்தி, அறிவியல், தொழில்நுட்பம், வானியல், நீதி என அனைத்தையும் தன்னகத்தேக் கொண்டுள்ள ஆற்றலாலும், மொழிக்கே உரிய பல தனிச்சிறப்புகளாலும், உலக அரங்கில் தமிழ் தாங்கி நிற்கும் ஆளுமையும் திறமும் சொல்லிலடங்கா! இச்சிறப்புகளுள் எல்லாம் பெருஞ்சிறப்பு, இவ்வொப்பற்ற வாழ்வியல் சூத்திரங்களை படைக்கும்போதே, நமக்கு மட்டுமல்லாது, பார் முழுக்க ஒரே கூரைக்குள் நிறுத்தி, நிறைவாய், சமமாய் நெறியூட்டி மகிழ்ந்திட்ட நம் தமிழன்னை, "தாயுமானவள்" என்றால் அது மிகையாகாது. இத்தமிழமுதினை இவ்வுலகு சுவைத்துணர்ந்திட சான்றோர் அருளிச்சென்றவற்றில் சில துளிகளும் அவை கூறும் அறங்களும் பின்வருமாறு:

யாதும் ஊரே யாவரும் கேளிர் (சகோதரத்துவம்)
தீதும் நன்றும் பிறர் தர வாரா... (செயலும் விளைவும்)
- கனியன் பூங்குன்றனார் (புறநானூறு)

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் (கருணை)
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே.. (தமிழின் பெருமை, அருள்)
- திருமூலர் (திருமந்திரம்)

வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு. (உள்ள உயர்வே உயர்வு, அறம்) குறள் எண்-595)
மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று. (உடல் நல அறிவு) (குறள் எண்-941)
பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான். (சமத்துவம், வினைஞானம்) குறள் எண்-972)
- திருவள்ளுவர் (திருக்குறள்)

தந்தை தாய் பேண். (அறம்) - ஔவையார் (ஆத்திச்சூடி)

பரமாய சக்தியுட் பஞ்சமாபூதந் தரமாறித் தோன்றும் பிறப்பு (உயிரின் தோற்றம்)
- ஔவையார் (ஔவைக்குறள்)

நிலம் நீர் தீ வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்... (உலகின் தோற்றம்)
- தொல்காபியனார் (தொல்காப்பியம்)

இவ்வகையில் உயர்ந்து நிற்கும் தமிழின் இனிமையறிந்ததால் தான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் "தமிழுக்கும் அமுதென்று பேர்!" என்று பெருமிதம் கொண்டாரோ!

முதற்சங்கம் (தென்மதுரை), இடைச்சங்கம் (கபாடபுரம்), கடைச்சங்கம் (மதுரை, கி.மு. 500 - கி.பி. 300) என முச்சங்கங்கள் அமைத்து தமிழ் வளர்த்த நம் சான்றோர், தங்கள் கைவரப்பெற்ற நூல்களின் நோக்க ஒழுங்குக்கேற்ப முறையே அவற்றை அகம் (காதல், இல்லறம்), புறம் (வீரம், கொடை, புகழ், ஒழுக்கம்) என பகுத்து, ஐந்திணைகள் (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை) வகுத்து, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை எனத்தொகுத்து, அவற்றை பதினெண்மேற்கணக்கு எனவும், நாலடியார், திருக்குறள் உட்பட நீதிநூல்களை உள்ளடக்கிப் பதினெண்கிழ்க்கணக்கு எனவும் படைத்துள்ளனர், பின்னர் அருள்நிறை பக்தி இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், இன்னபிற ஏராளமான அறிவுசால் நூல்களும் படைத்து, தமிழினத்தின் தலை சிறந்த வாழ்வியல் வரலாற்றை அருளிச் சென்றுள்ளனர்.

நமக்கு கைவரப்பெற்ற இலக்கியங்களுள் முதன்மை இலக்கணநூல் 'தொல்காப்பியம்' (கி.மு.500க்கும் முன்னர்), தொல்காப்பியத்திற்கும் முன்னரே தோன்றியதாக அறியப்படும், இலக்கணநூல் 'அகத்தியம்' அது நம் கைகளுக்கு கிட்டவில்லை. எனவே, அதற்கும் முன்னரே பல சமகால நூல்கள் இயற்றபட்டிருக்க வேண்டும். அதற்கும் நீண்டகாலத்திற்கு முன்னரே தமிழ் எழுத்துவடிவம் பெற்றிருக்க வேண்டும், இன்னும் முன்னதாக தோன்றியிருக்க வேண்டும். எனவே, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொன்மையும், சிறந்த இலக்கியத் தரமும், ஆழ்ந்த அறிவும் கொண்டிருந்ததால், செம்மொழிக்கான அனைத்துத் தகுதிகளும் முழுமையாய்ப் பெற்று, தமிழ் இன்று உலகச் செம்மொழிகளுள் உயர்ந்ததாய்ப் புகழோங்கி நிற்கின்றது.

அதனால் தான் தமிழ் மண்ணை தொட்டுச்செல்ல வந்தோர் கூட விட்டுச்செல்ல மனமின்றி தமிழ்மீதுத் தீராப்பற்றுகொண்டு திகழ்ந்தனர், தமிழுக்கு தன்னையே தந்து "நான் தமிழ் கற்றவன்" என்று சொல்லிக்கொள்வதில் பெருமிதம் கொண்டனர். தமிழகத்துக்குச் சமயத்தொண்டு செய்ய வந்தோர் கூட தமிழைக் கற்று, தாமும் இலக்கியம் படைத்து, உலகெலாம் கொண்டு சென்றனர். அவ்வாறு இங்கிலாந்திலிருந்து தமிழகத்திற்கு சமயப்பணி புரிய வந்தோரில் ஒருவர் தான் ஜி. யு. போப் என்பார். முதன்முதலில் திருக்குறளையும், நாலடியார் மற்றும் திருவாசகத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர், புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு பதிப்பித்ததும் அவரே. தமிழ் மீது கொண்ட பெருமதிப்பால், தங்கள் இயற்பெயரை மாற்றி தமிழ் பெயரை சூட்டி மகிழ்ந்தோரும் உண்டு. இத்தாலியிலிருந்து பாதிரியாரகப் பணியாற்ற வந்த காண்ஸ்டன்ஸோ ஜே. பெஸ்கி என்பார், "வீரமாமுனிவர்" என்று தன் பெயரை மாற்றிக்கொண்டதோடு மட்டுமல்லாமல் தமிழுக்கு பெருந்தொண்டாற்றி புது இலக்கியம்-தேம்பாவணி, உரைநடை, தமிழ் அகராதி, செந்தமிழ் இலக்கணம், வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், ஞானக் கண்ணாடி, பரமார்த்த குரு கதைகள் போன்ற சிறந்த படைப்புக்களை தமிழுக்கு தந்து பெருமையுற்றார்.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் இருந்த காலத்தில், ரஷ்யாவின் உலகப்புகழ் எழுத்தாளர், சிந்தனையாளர் லியோ டால்ஸ்டாய் அவர்கள் எழுதிய "போரும் அமைதியும்" (War and Peace) எனும் நூலைப் படித்தார். அதுவே காந்தியடிகளின் "அகிம்சைத் தத்துவத்திற்கு" அடித்தளம் எனலாம். அவரைத்தன் மானசீக குருவாக கொண்டிருந்த காந்தியடிகள், நேரில் சந்தித்தபோது டால்ஸ்டாயிடம், "அந்நூல் படைத்திட தங்களுள் வித்திட்டது எது?" என்று வினவிய போது "உங்கள் நாட்டில், தமிழில் இருக்கும் அரிய பொக்கிஷம், திருக்குறளே" என்று குறிப்பிட்டாராம். அதைக்கேட்ட காந்தியடிகள் தானும் குறளைப் படித்தறிந்து, "இது ஒரு ஞானக்களஞ்சியம்" (it is a treasure of wisdom) வேற்றுமொழியில் படிப்பதற்கே இவ்வளவு சிறப்பான இந்த நூலை அதன் மூலமொழியில் படித்தால் எவ்வளவு ஆழமாயும் சுவையாயும் இருக்கும்" என வியந்து, "திருக்குறளைத் தமிழில் படிப்பதற்காகவே நான் தமிழ் கற்றேன்" என்று கூறினாரென்றால், என்னே தமிழின் பேறு! இது உலகார் எவரையும் தன் மகவாய் ஈர்க்கும் நம் தமிழ்த்தாயின் வலிமையல்லவோ!

இங்ஙனம் சொல்லொனா சிறப்புகள் தாங்கி நிற்கும் நம் தாய்மொழியை பிறப்பிலேயே நாமெல்லாம் உரிமையாகப் பெற்றது இறைமை நமக்கு அளித்த பெரும் வரமன்றோ! இப்பெரும்பேறுதனை உளமார உணர்ந்து தமிழை போற்றிக் காத்திடுவோம், வளர்த்துப் பெருமை கொள்வோம்!. அகம், புறம், அறம் படைத்து, இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழ் தாண்டி, தற்கால அறிவியல் கண்டுபிடிப்புகளையெல்லாம் பலகாலம் முன்பே தம் தவஆற்றலால் உணர்ந்து, அவற்றை வியக்கும் கவிகளாய் "அறிவியல் தமிழாய்" நமக்கு தந்துச் சென்றிட்ட நம் தமிழ்ச்சான்றோரது அறிவின் தரம் அறிந்து, அவ்விலக்கிய முத்துக்களையெல்லாம் எடுத்து தொடுத்து அடுத்த தலைமுறையினருக்கு, நிகரற்ற "வாழ்வியல் தமிழாய்" கொடுத்துச்செல்ல ஆவல் கொள்வோம்.

அதற்கான வழிகளில் ஒன்று தான், தமிழின் மேன்மையுணர்ந்து, இந்த சிங்கை மண்ணில், தமிழ்ப் பணியாற்றி வரும் அத்துனை தமிழ் அமைப்புகளின் தோற்றமும் தொடர்ச்சியும் எனலாம்! அவற்றுள் "வாழ்வியல் இலக்கியப் பொழில்" குறிப்பாக, "சங்கத்தமிழ்" போற்றி மகிழ்கிறது. தமிழின்பால் கொண்ட பெருவேட்கையில் இப்பொழிலைத் தொடங்கி, தானும் தன்னோடு இப்பணியில் இணைவோரும் உளப்பூர்வமாய் பொதுநல நோக்குடன் உழைக்க, முன்மாதிரியாக நின்று, தனது இயல்பு வாழ்வின் இளைப்பாறும் நேரத்தில் கூட தமிழேச் சிந்தையாய், கடந்த ஓராண்டு காலமாய் அயராது செவ்வனே தமிழ்ப்பணி ஆற்றிவரும் சகோதரர் பாவலர் திரு. கிருட்டிணமூர்த்தி அவர்களை மனதாரப் பாராட்டி, வாழ்த்திடுவோம். அவர்தம் தமிழ்ப்பணி என்றும் வளர்ந்திட, "வாழ்வியல் இலக்கியப் பொழில்" பல தலைமுறைகள் தாண்டி சிறந்தோங்கி வளர்ந்திட இறையருள் வேண்டி, தமிழார்வம் கொண்ட நமக்கெல்லாம் இவ்வாய்ப்பினை அளித்தமைக்காக அவருக்கு மனதார நன்றி கூறி தமிழன்னையின் தாள் வணங்கி மகிழ்கின்றேன்.

தாயே தமிழே வாழ்க!

சிங்கப்பூர்
15-09-2018

**அன்புடன்,**
**தேன்மொழியாள் ஜெ. சின்னப்பா**



# தமிழர்தம் விளையாட்டுகள்

புலவர் மு.சந்திரசேகரன், எம்.ஏ.,எம்.எட்.
திருவாரூர், தமிழ்நாடு

மொழி, இலக்கியம், கலை, விளையாட்டு போன்ற பலவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிதான் ஒரு சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, ஆகியவற்றின் வளர்ச்சி. இதில் ஒன்றின் வளர்ச்சி குறைவுபட்டாலும் அப்பண்பாடு முழுமை பெற்றதாகாது. ஒரு சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் பரிணாம வளர்ச்சியுடன் இயைந்தது அச்சமுதாயத்தின் விளையாட்டுகள்.

விளையாட்டுகளை வெறும் பொழுது போக்கு என்று கருத இயலாது. இவை பொழுது போக்கிற்காக மட்டுமின்றி உடல்நலம், மனநலம் முதலியவற்றைப் போற்றிப் பேணுபவை என்பதை எல்லாச் சமுதாய அமைப்பிலும் நாம் காணலாம். ஓர் இனம் எவ்வாறு தன் மொழியைக் கண்போல் போற்றிப் பாதுகாக்க வேண்டுமோ அதே போன்று தத்தம் விளையாட்டுகளையும் போற்றிப் பேணவேண்டும்.

உடம்பை வளர்த்தேன்; உயிர் வளர்த்தேனே - என்பது திருமூலர் வாக்கு. ஆரோக்கியமாக இருந்தால்தான் உயிர் உறுதியாக இருக்க முடியும். சிறு குழந்தை கை, கால்களை உதைத்துக் கொள்ளும் போதே உடல் ஆரோக்கியத்திற்கான விளையாட்டுகளை ஆடத் தொடங்குகின்றன. நமது தமிழகத்து விளையாட்டுகளை அறு வகையாகப் பிரிக்கலாம்.

1. ஆடவர் விளையாட்டு:

இதில் சல்லிக்கட்டு, சிலம்பம், சடுகுடு, இளவட்டக்கல், உறிப்பானை உடைத்தல், இரட்டைமாட்டுப் பந்தயம் போன்றவைகள் அடங்கும். இதில் ஆண்மகனின் வீரம் வெளிப்படும். அன்றைய சடுகுடு இன்றைய கபடி ஆட்டமாக சர்வதேச அளவில் விளையாடப்படுகிறது.

2. மகளிர் விளையாட்டு:

இதில் தாயம், பல்லாங்குழி, தட்டாங்கல், பரமபதம் போன்றவை அடங்கும். நமது மகளிர் வெளியில் சென்று விளையாட முடியாது. இது நமது பண்பாட்டுப் பழக்கம். எனவே அவர்கள் அக விளையாட்டு விளையாடுவர். ஆடவர்கள் ஆண்மைய வெளிப்படுத்தும் விளையாட்டை வீட்டின் வெளியே விளையாடுவார்கள். அது புற விளையாட்டு எனப்படும்.

3. சிறுவர் சிறுமியர் விளையாட்டு:

இதில் குலகுலையாய் முந்திரிக்காய், நொண்டி, தொட்டுவிளையாடுதல், கண்ணாமூச்சி போன்றவை அடங்கும். பாலியல் உணர்வு, அரும்பாத அந்தப் பருவத்தில் ஒருவரோடு

ஒருவர் அன்போடு பழகி பாசமாகவும், நேசமாகவும் சேர்ந்து விளையாடும் விளையாட்டு.

4. சிறுவர் விளையாட்டு:

இதில் பச்சைக்குதிரை, மரங்கொத்தி, கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, எறிபந்து, பட்டம் விடுதல், கோலி விளையாட்டு என்று பலவகை உண்டு. விளையாட்டுகளில் பெண் பிள்ளைகளைச் சேர்க்க மாட்டார்கள். நமது பிள்ளையார் பந்துக்கும் தற்போதைய கிரிக்கெட்டுக்கும் தொடர்பு இருப்பது போல் தோன்றும்.

5. சிறுமியர் விளையாட்டு:

இதில் கண்கட்டி விளையாடுதல் மச்சுமேலயாரு, கும்மி, கோலாட்டம், மணல் வீடு கட்டுதல் போன்றவை அடங்கும். சிறுமியரின் இந்த ஆட்டங்களைப் பார்த்தால் எந்த நாட்டுக்காரனும் பரவசமடைவான். இதில் உள்ள அழகு நளினம் குழுவினர் ஒற்றுமை பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

6. குழந்தை விளையாட்டு:

இதில் பருப்பு கடைந்து, உபசரிப்பு விளையாட்டு, தென்னைமரத்து விளையாட்டு போன்றவை அடங்கும்.

நமது விளையாட்டுகள் உடல் திறனையும் உள்ள வலிமையையும் மட்டும் வெளிப்படுத்துவதில்லை. நமது பண்பாட்டையும் வெளிப்படுத்துவதில் உன்னதமானவை. ஒரு பெண் நடுவே உட்கார்ந்து கொண்டு தன்னைச் சுற்றி சிறு குழந்தைகளை உட்காரவைத்து புறங்கை வெளியே தெரியும்படி உட்கார் வைப்பாள். ஒவ்வொரு விரலாகத் தொட்டு அரிசி வாங்கி புளி வாங்கி என்று சொல்லி உள்ளங்கையினைத் திருப்பி பருப்பு கடைந்து என்றுக் கூறி கொண்டே தன் முழங்கையால் தடவுவாள். பின்னர் காக்காவுக்கும் போட்டு, அம்மாவுக்கும் கொடுத்து ஊரில் உள்ள அத்தைக்கும் கொடுத்து உனக்குக் கொஞ்சம் எனக்குக் கொஞ்சம் என்று சொல்லிவிட்டு குழந்தையின் உள்ளங்கையிலிருந்து ஆரம்பித்து நண்டு ஊருது நரி ஊருது என்று சொல்லிக்கொண்டே குழந்தையின் அக்குள் வரை தடவிச் செல்வாள். குழந்தை கூச்சத்தால் சிரிக்கும். முதலில் சமைத்த உணவைக் காக்கைக்குப் போட வேண்டும், பின்னர் எல்லோருக்கும் பகிர்ந்து உண்ண வேண்டும், எல்லோருக்கும் கொடுத்துவிட்டு நீ உண்ண வேண்டும். பிறருக்குக் கொடுத்துவிட்டு வருத்தப்படாமல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்ற பண்பாட்டைச் சிறு குழந்தை முதலேக் கற்றுக் கொடுக்கும் உயர்ந்த பண்பாடு நம் விளையாட்டிலும் உண்டு. பேசிப்பழகு குழந்தைகள் பேசுவதே ஒரு விளையாட்டு தான், தான் தவறாகப் பேசுகிறோமென்று தெரியாமலேயே பேசிக்கொண்டிருக்கும்.

*ஓடுற நரியில*
*ஒருநரி கிழநரி*
*கிழநரி முதுகில*
*ஒருபிடி நரைமயிர்*

*இதுயாரு தச்ச சட்டை எங்க*
*தாத்தா தச்ச சட்டை*

இந்த தொடர்களை உச்சரிக்கச் சொல்லும் போது தவறாக உச்சரிக்கும் எல்லோரும் சிரிப்பார்கள். ஆனால், அந்த குழந்தை றகர ரகரங்களும் ணகர னகரங்களும் லகர ளகரங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாகவும் வரும். இவைகளை உச்சரிப்பதற்குக் குழந்தைகள் தடுமாறும், அத்தடுமாற்றத்தினை நீக்குவதற்கு இந்த விளையாட்டுகள் பயன்படுகின்றன.

தமிழகத்து விளையாட்டுகள் உடலை, உள்ளத்தை, ஆற்றலை விளையாட்டாக வளர்த்துவிடும் உயரிய கலை. இதனை நாம் மறந்து விட்டால் நாம் நம்முடைய பண்பாட்டை இழந்துவிடுவோம். விளையாட்டுகள் நம்முடைய வாழ்வின் ஒரு அங்கமாகத் திகழ்ந்தவை. நல்ல விளையாட்டு வீரன் கட்டுப்பாடு உள்ளவனாக இருப்பான். ஏனென்றால், கட்டுப்பாட்டோடு விளையாடிப் பழகினவன். எனவே, ஆடுவோம், பாடுவோம் உடல் ஆரோக்கியமாக வாழ்வோம்.

**திருவாரூர்** **மு. சந்திரசேகரன்**
**01-09-2018**



# வாழ்த்துச் செய்தி

**P. காளிமுத்து**
தலைவர், இந்திய நற்பணிச் செயற்குழு
சிராங்கூன் சமூக மன்றம்

**வா**ழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பின் தமிழ்ப்பணி போற்றுதலுக்குரியது. சிராங்கூன் நார்த் வட்டாரத்தில் உள்ள தமிழ்க் குடும்பங்களோடு இணைந்து பள்ளி மாணவர்களும் பெற்றோர்களும் பயன்பெறும் வகையில் மேடைப்பேச்சு, இலக்கியப் பாடல், சிற்றுரை, நாடகம், பட்டிமன்றம் என பல்வேறு திறமைகளை வளர்க்க பலவகைகளில் பாடுபட்டு வருகிறது. இதன் அரிய முயற்சியாக, மிகவும் பயனுள்ள வாழ்வியல் நெறிமுறைகளைத் திரட்டி சாறாகப் பிழிந்து இளையோர்க்கு எளிதில் புரியும் வகையில் வழங்கி வருவது சிறப்பாகும்.

சிராங்கூன் சமூக மன்றத்தில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பல்சுவை நிகழ்ச்சிகளாகப் பாடல், ஆடல், கதை, கவிதை என பலவற்றைத் தொகுத்து வழங்கியது கண்டு இந்திய நற்பணி செயற்குழு பெருமை கொள்கிறது. தொல்காப்பியம் தொடங்கி சங்க இலக்கிய நூல்கள், ஔவையார் நூல்கள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் என பல்வேறு தமிழ் நூல்கள் கூறும் கருத்துகளைத் திரட்டித் தமிழின் தொன்மையையும் வழங்கி வருவதும் சிறப்பாகும்.

வாழ்வியல் இலக்கியப் பொழில் கடந்த ஓராண்டாக சிறந்து செயல்பட்டு வருகிறது. மேலும் தொடர்ந்து தமிழ்ப்பணியில் சிறந்து விளங்கிட மனதார வாழ்த்துகின்றேன். பல்வேறு வெற்றிப்படிகளைத் தாண்டி நூற்றாண்டு விழாக்களை நடத்திட சிராங்கூன் சமூக மன்ற இந்திய நற்பணிச் செயற்குழு சார்ப்பாக வாழ்த்துகின்றேன்.

**சிங்கப்பூர்** P. காளிமுத்து BBM

**23-09-2018**




திருவள்ளுவர் தமிழ் வளர்ச்சிக் கழகம்
THIRUVALLUVAR TAMIL VALARCHIK KAZHAKAM
48, Serangoon Road, #02-19 Little India Arcade, Singapore 217959
www.tamilvalluvam.org Email: valluvanthamizh@gmail.com
Telephone: 66006046 UEN: S52SS0007A


அன்புடையீர்,

*நயமுறத் தமிழ்வளர் 'இலக்கியப் பொழில'து!*

*நிலைபெற வாழ்த்துதல் நேயர்தம் தொழிலது!!*

சிங்கப்பூரில் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 'வாழ்வியல் இலக்கியப் பொழில்' ஓராண்டுக்குள் மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டு வருகிறது.

சிங்கப்பூரில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும், இலக்கியம் தொடர்பான ஈடுபாட்டைச் சிங்கப்பூர்த் தமிழர்க்ளுக்கும், சிறார்களுக்கும் ஏற்படுத்தவும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, செயற்படுத்திவரும் 'வாழ்வியல் இலக்கியப் பொழில்' ஆற்றிவரும் சேவை அளப்பரியது.

தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பேணி வளர்க்கும் விதத்தில் பல்வேறு நிகழ்வுகளை, குறிப்பாகப் 'பதினெண்கீழ்க்கணக்கு', 'பதினெண் மேல்க்கணக்கு'ப் போன்ற சங்க இலக்கிய நூல்களில் இருந்து சிறப்புரைகள், 'சங்க இலக்கியம் கூறும் வாழ்வியல் நெறி முறைகள்' என்ற தலைப்பில் சிற்றுரைகள் போன்றவற்றை நடத்துவதன் மூலம் தமிழில் புதிய, இளம் படைப்பாளிகள் உருவாகக் களம் அமைத்துக் கொடுத்து ஊக்கப்படுத்தி, முத்தமிழும் வளர வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

*'பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்*

*இருள்தீர எண்ணிச் செயல்'* *குறள் 675*

என்ற வள்ளுவன் வாக்கிற்கேற்ப, தமிழ் மொழியையும் பண்பாட்டையும் பேணி வளர்க்கும் விதத்தில் பல்வேறு விழாக்கள், போட்டிகள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பயிலரங்குகள் போன்றவற்றை

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில் , உரிய இடம் ஆகிய ஐந்தினையும் தகுந்த முன்னேற்பாடுகளோடு நடத்துவதன் மூலம் தமிழில் புதிய, இளம் படைப்பாளிகள் உருவாகக் களம் அமைத்துக் கொடுத்து ஊக்கப்படுத்தி, முத்தமிழும் வளர வழி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

முதலாவவது ஆண்டை நிறைவு செய்திருக்கும் 'வாழ்வியல் இலக்கியப் பொழில்' இன்னும் பல்லாண்டு காலம்,

*'எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற்கு அரிய செயல்'* *குறள் 489*

இன்தமிழுக்குப் பலவற்றைச் செய்து சிறப்புற வேண்டுமெனச் சிங்கப்பூர் 'திருவள்ளுவர் தமிழ் வளர்ச்சிக் கழகம்' மனமார வாழ்த்துகிறது.

இனிய வாழ்த்துக்களுடன்,

**சிவநேசன் சிவபாலன்**

தலைவர்,
திருவள்ளுவர் தமிழ் வளர்ச்சிக் கழகம்
சிங்கப்பூர்

# மழலையரின் நினைவலைகள்



தமிழுக்கு வணக்கம். நமது வாழ்வியல் இலக்கியப் பொழில் மாதாந்திர சந்திப்பு முதல் நிகழ்ச்சியில் முதல் படைப்பாளராக மூன்று வயதில் என்னை மேடையேற்றிய பெருமை பாவலர் திரு.எல்ல.கிருஷ்ணமூர்த்தி ஐயா அவர்களையே சாரும். அந்தச் சிறுவயதில் இருந்து இன்று வரை என்னை ஊக்குவித்து மேடை கூச்சம் என்றால் என்னவென்று எனக்கு தெரியாத காரணத்தால் தான் என்னால் பள்ளி மற்றும் மற்ற நிகழ்ச்சிகளிலும் சிறப்பாக கலந்து கொள்ள முடிகிறது. அமைப்பினர் யாவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

***ஸ்ரீயா ஸ்ரீராகவன் (L.K.G)***



எனக்கு கிடைத்த அற்புதமான முதல் மேடை. எனக்கு தமிழ் ஆர்வத்தையும், தன்னபிக்கையும் கொடுத்தது. என் பேச்சாற்றலை வெளிப்படுத்த உதவியது.

இதற்கு ஊன்றுகோலாய் இருந்த வாழ்வியல் இலக்கிய பொழிலின் அனைத்து தமிழ் சான்றோருக்கும் என் மனமார்ந்த நன்றி.

***கு.ஜோஷிக்கா (K2)***



நான் ஏறிய முதல் மேடை எனது பேச்சாற்றலை வளர்த்து கொள்ள வாழ்வியல் இலக்கிய பொழில் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. சங்க இலக்கியத்தைப் பற்றி சிறு வயதிலேயே நான் தெரிந்து கொண்டேன்

***இரா.சர்வினி (K2)***

# மழலையரின் நினைவலைகள்



நான் அன்யா. தொடக்கநிலை ஒன்றாம் வகுப்பில் படிக்கிறேன். நான் 'வாழ்வியல் இலக்கிய பொழில்' நிகழ்ச்சிக்கு வருவதன் மூலமாக பாரதியார் பாடல்கள், திருக்குறள் பாடல்கள், நாலடியார் பாடல்கள் மற்றும் பல பதினெண் கீழ்க்கணக்கு பாடல்களைப் பற்றி அறிந்து கொண்டேன். நான் சிறுவயதிலிருந்து கடைபிடிக்க வேண்டிய பல கருத்துக்களை அறிந்து கொண்டேன். என் தமிழை மெருகேற்ற எனக்கு கிடைத்த வாய்ப்பாக கருதுகிறேன். வாழ்வியல் இலக்கிய பொழிலுக்கு எனது நன்றிகள் பல.

***க.அன்யா (P1)***



எனக்கு வாழ்வியல் இலக்கியப் பொழில் மிகவும் பிடிக்கும். காரணம், மேடையில் பேசவும், பாடவும், ஆடவும், கதைகூறவும் வாய்ப்புகள் கொடுத்தது. தமிழில் உள்ள அரியப் பல அறிவுரைகளைத் தெரிந்துக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சி.

***கி.ஜீவஜோதிகா (P2)***



சங்க இலக்கியச் செய்திகளை அறிவதற்கும், சங்க இலக்கிய பாடல்களைக் கற்பதற்கும் களம் அமைத்து கொடுத்த 'வாழ்வியல் இலக்கிய பொழில்' என்றென்றும் மென்மேலும் வளர வாழ்த்துக்கள்.

***கா. நிதிஷ்ராஜ் (P2)***

# மழலையரின் நினைவலைகள்

என் தாய் மொழியான தமிழ் மொழியின் தொன்மையை அறிந்து கொண்டேன். ஒவ்வொரு மாதமும் எண்ணற்ற நூல்களையும்,அந்நூல் கூறும் கருத்துக்களை மிக எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் பகிர்ந்து கொண்டார்கள். இதனால் என்னால் மேடையில் தெளிவாகவும் தைரியமாகவும் பேச முடிகிறது. என் போன்ற சிறுவர்களின் படைப்புகள், சற்று வியப்பையும் அதே சமயம் புது நண்பர்களையும் தந்தது. வாழ்வியல் இலக்கியப் பொழிலின்,வேரும் விழுதும் பகுதியில் என் பெற்றொருடன் சேர்ந்து பேசியது புது அனுபவமாக இருந்தது. நன்றி! நன்றி!



***இர.கோ.பிரித்திவ் (P2)***



மேடையில் என்னுடைய படைப்புக்களைப் படைக்கும் பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. சங்க இலக்கிய பாடல்கள் சில தெரிந்து கொடுத்தேன். நான் படிக்கும் பொழுது என் தங்கையும் என்னுடன் சேர்ந்து படிக்கிறாள். இன்னும் நிறைய கற்று கொள்ள வேண்டும் என்று ஆர்வமாக உள்ளது. வாழ்வியல் இலக்கிய பொழிலுக்கு மனமார்ந்த நன்றி.

***ச.சம்ரித்தா (P3)***

எனது பேச்சு திறமையை வளர்க்க மிகவும் இத்தளம் உதவியாக உள்ளது. மேடையில் துணிச்சலாக தமிழ் பேசுவது மிகவும் சுலபம். தற்போது எனக்கு, சங்க கால இலக்கியங்களைப் பற்றிய கருத்துக்களை நிறைய கற்றுக் கொள்ள முடிகிறது. என்னுடன் சேர்ந்து என் தங்கை கமலிகாவும் எல்லா விதமான திறமைகளையும் இத்தளத்தின் வாயிலாக கற்றுக் கொள்கிறாள். குழந்தைகளின் பேச்சு திறமையை இலவசமாக வளர்க்கும் விதத்தில் அமைந்து வருவது மிக மிக பாராட்டிற்கு உரிய ஒன்று..நன்றி.



***ரா.கவின்நிலா (P4)***



# வாழ்த்துச் செய்தி

**கவிஞர் சீர்காழி உ.செல்வராஜு**
சேரன் பேச்சாளர் மன்றம்

வாழ்வியல் இலக்கியப் பொழில் தனது ஓராண்டினை நிறைவு செய்து அடுத்த ஆண்டிற்குள் நுழைய இருப்பது மட்டற்ற மகிழ்ச்சி. கவிதை, இலக்கியம், மேடைப்பேச்சு, நகைச்சுவை எனப் பல பரிணாம வளர்ச்சியோடு வாழ்வியல் இலக்கியப் பொழில் மின்னுகிறது.

இளையோர் மற்றும் பெற்றோர்க்கான மிக அருமையான தளம். குழந்தைகள் சிறப்பாக மேடையில் தங்கள் படைப்புகளைப் படைக்க பக்கதுணையாக இருக்கும் பெற்றோர்களைக் கண்கூடாக பார்க்க நேரிடுகிறது. இதுவே தமிழை அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் மிகப் பெரிய முயற்சி. இந்த முயற்சியில் பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தியும் அவரோடு தோள்கொடுத்து விழுதுகளாக காத்து நிற்கும் எண்ணற்ற பெற்றோர்களையும் தமிழ் ஆர்வலர்களையும் மனதார பாராட்டுகிறேன்.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகைகளில் வரும் அகநானூறு, புறநானூறு என அப்பப்பா... என்ன ஆச்சர்யம் ? மருத்துவக் குறிப்புகள் என பல்வேறு அங்கங்களை சுவையாக படைத்துவரும் “வாழ்வியல் இலக்கியப் பொழில்” தமிழன்னைக்குச் சேர்க்கும் அணிகலன்கள். அந்நிய மொழிகள் ஊடுருவும் இத்தருணத்தில் இதுபோன்ற சேவைகள் மூலமே தமிழைப் பரவலாக்க முடியும். வலிமையாகவும் இனிமையாகவும் இளையோர்கள் உணரும்படி செய்ய முடியும்.

தொடரட்டும் தொன்மைமிகு தாய்மொழித் தொண்டு !

வளர்க வாழ்வியல் இலக்கியப் பொழில் ஆல்போல் !

**சிங்கப்பூர்**
**14-09-2018**

வாழ்த்துகளுடன்,
**கவிஞர் சீர்காழி உ.செல்வராஜு**



# வாழ்த்துச் செய்தி

**புலவர் தீ.விஜயசுதா**
தாமன் ஜீரோங் தமிழ் மன்றம்
சிங்கப்பூர்

உயர்தனிச் செம்மொழிகளில் இன்றளவும் உயர்ந்திருப்பது நம் தமிழ்மொழி மட்டுமே. சங்ககாலந் தொட்டே, இற்றைய காலம் வர நம் தமிழ்மொழியிலுள்ள இலக்கியங்கள் எண்ணிலடங்கா ! அவ்விலக்கியங்களின் இன்சுவையை இன்றைய இளஞ்சிறார்களின் இயல்பறிந்து கொடுப்பதில் வல்லவர் பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி அவர்கள். தமிழின் பெருமைகள் பேசியும், மரபுக்கவிதைகள் இயற்றியும் தன் தமிழ்வேட்கை தணிக்கும் இனிய பண்பாளர்.

பழங்கால இலக்கியங்களை நடைவகையால் மாற்றியும், நடைமுறை எடுத்துக்காட்டுகள் கூறியும் தமிழ் வளர்க்கும் ‘வாழ்வியல் இலக்கியப் பொழில்’ எனும் இவருடைய அமைப்பு தமிழர்களுக்குக் கிடைத்த அரும்பேறாகும்.

தமிழ்க்கல்விப் பணி என்பது மாணவர்களுக்குத் தமிழ் கற்றுக் கொடுப்பது மட்டுமல்ல; தமிழில் ஆர்வம் ஊட்டுவதும் தமிழ்ப்பணிதான் என்ற அரியதொரு கருத்தை நாளும் நடைமுறைப்படுத்தி வரும் இவ்வமைப்பிற்குத் தமிழன்னையின் ஆசிகள் என்றைக்கும் உண்டு.

இதுபோன்று பற்பல தமிழ் மன்றங்கள் சிங்கையில் மலர வழிவகைசெய்த இப்பொழிலுக்குத் தமிழார்வலர்களின் ஆதரவு என்றைக்கும் உண்டு. எளிமையும், தெளிவும் தமிழ் இலக்கியத்தின் இருகண்கள் என்பதை இன்றைய சிறுவர்களுக்கு உணர்த்திய பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தமிழ்ப்பணி மேன்மேலும் வளர இறைவனை இறைஞ்சுகிறேன்.

**சிங்கப்பூர்**
**15-09-2018**

நன்றி.
தீ.விஜயசுதா



# வாழ்த்துச் செய்தி

**திருமதி அ. மஹாஜபீன்**
ஆசிரியை

சிங்கப்பூரில் தமிழை வளர்க்க அரும்பாடுபடும் பல அமைப்புகளில் ஒன்றான வாழ்வியல் இலக்கியப் பொழில் தனக்கென ஒரு தனிச் சிறப்பையும், பெருமையையும் பெற்றுள்ளது. சிங்கையில் தமிழைச் சிறகடித்துப் பறக்க வைத்துக்கொண்டிருக்கும் ஒரு சங்கத்தமிழ் சோலை.

"வாழ்வில் இலக்கியப் பொழில்" நடத்தும் மாதாந்திர சந்திப்பு நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் அல்ல, சனிக்கிழமை மாலையில் சங்கமிக்கும் சங்கத் தமிழ் அரங்கில், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பங்கேற்கும் பல அங்கங்களை நிகழ்த்தி வருகின்றன. அவற்றில் சிறுவர்களுக்கென மிகப்பெரிய பலமான, நுண்மையான பிரிவு சங்க இலக்கியங்கள், நன்னெறிக் கதைகள், சிறுவர் நாடகங்கள், மாறுவேட போட்டிகள், தமிழ் பாடல்கள், செய்யுள், பழமொழி, மற்றும் திருக்குறள்.

தமிழ் தேனைப் பருக உதவும் இந்த அமைப்பு, பெரியவர்களுக்காகப் பதினெண்கீழ்க்கணக்கு மற்றும் பதினெண்மேல்கணக்கு நூல்களிலிருந்து சிற்றுரைகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் வேரும் விழுதும் அங்கமாக தாயும் சேயும் சேர்ந்து படைக்கும் விதமும் அருமை. அதுமட்டுமல்ல கவிதையும் கானமும், சித்த மருத்துவக் குறிப்புகள் கொடுக்கும் விதமும், அதனை நம் கண்களுக்குக் காண்பிக்கும் முறைகளும் பாராட்டுதற்குரியது.

சிங்கப்பூரில் தமிழ் இலக்கிய வட்டங்களிலேயே "வாழ்வியல் இலக்கியப் பொழில்" அமைப்பு ஒன்று தான் பட்டை தீட்டி மின்னும் வைர கற்களாக, மாணவர்கள் ஒவ்வொருவருக்குள்ளும் புதைந்திருக்கும் தனித் திறமையை வெளிக்கொணர உதவுகிறது. மேடையேறுதற்கே பயப்படும் சிறார்களை இன்று மிகச் சிறந்த தமிழ் பேச்சாளராக சிங்கையில் வலம் வரச் செய்கிறது. பல்வேறு நிகழ்ச்சிகளில் பதக்கங்களும் , பரிசுகளும் பெற்று வருவதை அறிந்து மனம் நெகிழ்கின்றது. அதுமட்டுமல்ல , அந்த வரிசையில் என்னுடைய மகளும் தமிழில் பல போட்டிகளில் பங்கேற்றுச் சாதனைகளைப் பெற்று வருகிறார் என்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சிங்கப்பூரில், பல்வேறு இனத்தவர்களுடன் பழக வேண்டியுள்ள நம் குழந்தைகளிடையே தாய்மொழியில் பேசுவது மிகப்பெரிய சவாலாக நிறைந்த நிலையில் நம் வாழ்வியல் இலக்கியப் பொழில் தமிழ் அமைப்பு தொடர்ந்து நல்லாதரவு அளித்து, மாணவச்செல்வங்களுக்குத் தமிழில் ஆர்வத்தையும், திறனையும் பெருக்க பேருதவி அளிக்கிறது என்று கூறினால் மிகையாகாது.

சிங்கையில், “வாழ்வில் இலக்கியப் பொழில்” தமிழ் அமைப்பின் ஆணிவேராக திகழ்பவர் திரு எல்ல. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் . இவரின் எழுத்துநடை மொழிவளம், மரபு கவிதைகள் அனைத்தும் பாராட்டுதற்குரியது, தன்னடக்கத்துடன், பழகுவதற்கு மிகவும் எளிமையான

மாமனிதர். ஒரு தமிழ் அமைப்பை உருவாக்கி அதில் வெற்றி வாகை சூடுவது என்பது இலகுவானது கிடையாது. சில வேளைகளில் ஏற்படும் இடையூறுகளுக்கு நடுவே தமிழுக்காக தமிழ் வளர அரும்பாடுபடுகிறார் என்று இவரின் முயற்சிகளை சொல்லிக்கொண்டே போகலாம் . முக்கியமாக, தன்னுடைய சொந்த செலவில் இதனை நடத்தி வெற்றி கண்டுள்ளார். தரணியெங்கும் தமிழ் வாழ வழிவகுக்கும் என் மரபு கவிஞருக்குக் கரம் உயர்த்தி எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பண்புடன்,

**திருமதி அ.மகாஜபீன்.**

ஆசிரியை.

**20-01-2018 அன்று 3ஆவது சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....**



திருமதி புவனேஸ்வரி
வரவேற்புரை வழங்கியபோது




நிகழ்ச்சி நெறியாளர்களில் ஒருவர்
திருமதி தேன்மொழியாள்



பாரதியார் பாடல் - ரக்ஷிகா
மற்றும் தர்ஷிகா



புலவர் வள்ளியப்பன் அவர்களுக்கு தலைவர்
இயற்றிய நூல்களை வழங்கியபோது....

# வாழ்த்துச் செய்தி



**கவிஞர் சிங்கை கலைவாணி மோகன்**

**வா**ழ்வியல் இலக்கிய பொழில் ஆண்டொன்று நிறைவு விழா கொண்டாடுகின்றது.பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சீரிய முயற்சியால் உதயமான வாழ்வியல் இலக்கிய பொழில் வளரும் சந்ததியினருக்குச் சங்க தமிழை எளிய முறையில் கொண்டு சேர்க்க பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். அவரோடு தோள் கொடுத்த தமிழ் ஆர்வலர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுக்களும் வாழ்துக்களும்.

சங்க இலக்கியம் கிறிஸ்துக்கு முற்பட்ட காலப்பகுதியில் எழுதப்பட்ட செவ்வியல் இலக்கியங்களாகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினென் கீழ்க்கணக்கு நூல்களை இக்கால மாணவர்களிடம் கொண்டு சேர்க்க முடியுமா என்பதே கேள்விக்குறி. அதையும் சவாலாக எடுத்துக்கொண்டு மாணவர்களைக் கவரும் வண்ணம். அக நானூறு, புறநானூறு, தொல்காப்பியம், திருக்குறள், மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன் பாடல்களை விருப்பமுடன் படித்து மேடையிலும் பேச வைத்தார்கள். பெற்றோர்களும் இணைந்து சங்கத்தமிழைப் படித்து நிகழ்ச்சியில் பங்கெடுத்தார்கள். நன்னெறி கொள்கைகள் விதைக்கப்பட்டு, உரமிட்டு, உயிராக்கி பயிராக்கும் தருணமிது...

தமிழ் இலக்கியம் உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று. புத்தாக்கம், புதுமுயற்சி புதுமைகள் பல சேர்த்து சங்க இலக்கியம் நம் மாணாக்கர்களிடம் தெள்ளத் தெளிவாக சேரும் என்பதில் உள்ளங் கை நெல்லிக் கனியாகத் தெரிகின்றது. மீண்டும் ஒரு முறை பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்திக்கும் அவர்தம் வாழ்வியல் இலக்கிய பொழில் குடும்பத்தினர் அனைவருக்கும் நன்றிப்பூக்கள்

இலக்கியம் நுகர்வோம் இலக்கியம் வளர்ப்போம் இலக்கியம் படைப்போம், பண்பாட்டு விழுமியங்களை பேணுவோம் !

தமிழோடு உயர்வோம் !

**சிங்கப்பூர்**
**10-09-2018**

**சிங்கை கலைவாணி மோகன்**



# வாழ்த்துச் செய்தி

**கவிஞர் கற்பகவள்ளி துரைராஜ்**

“வாழ்வியல் இலக்கிய பொழில்” அமைப்பின் முதலாம் ஆண்டு விழாவில் எனது வாழ்த்துக்களும் கருத்துக்களும் பங்கு பெறுவதில் மிக்க மகிழ்கிறேன்.

எட்டுத்தொகை நூல்களையும் பத்துப்பாட்டுக்களையும் கொண்ட சங்க இலக்கியங்களைக் கருத்தில் கொண்டு நடவாமல் நம் வாழ்வியல் முறை சிறப்பிக்க வழியில்லை. அத்தகு சிறப்பு வாய்ந்த சங்க இலக்கியங்களை நம் தலைமுறையினர் பாதுகாத்துப் பின்தொடர்தல் அவசியம். நம் தமிழ் இனத்தின் பெருமையைச் சங்க இலக்கியங்கள் மூலம் நம்மால் உணரமுடிகிறது.

காதலையும் வீரத்தையும் நம் முன்னோர்கள் இலக்கியங்களில் அதிகமாக எழுதி வடித்து உள்ளார்கள். ஆனால் இன்றைய தலைமுறையினர் காதல் மற்றும் வீரம் என்ற பெயரில் எத்தனையோ அபிராமிகளாகவும் சுந்தரர்களாகவும் உலா வருகின்றனர். இதற்கு முக்கிய காரணம் பெற்றோர் சொல்படி நடவாமையே. முன்னோர்களின் கருத்துக்களைப் பாடமாக எடுத்துக்கொண்டு விழிப்புணர்வோடு செயல்படின் இவ்வாறான தவறுகள் நடைபெற வாய்ப்புகள் இல்லை.

நம் முன்னோர்கள் சேர்த்து வைத்த செல்வம் கூட அழிந்துவிடும். ஆனால் அவர்கள் விட்டுச்சென்ற சிந்தனைகளும் கருத்துக்களும் என்றும் நமக்கு எல்லா நேரத்திலும் எல்லா இடத்திலும் பயன்படும்.

அன்னாய்! இவனோர் இளமாணாக்கன் தன்னூர் மன்றத் தென்னன் கொல்லோ? என்ற குறுந்தொகை பாடலின் மூலம் கல்வியின் பெருமையையும் வறுமையிலிருந்தாலும் கல்வி உறுதுணையாக இருந்து வைக்கும் என்பதை நம் குழந்தைகள் உணரவேண்டும்.

ஏதோதோ அமைப்புகள் குழுக்கள் என்ற பெயரில் வசூல் வேட்டையை மட்டும் குறிக்கோளாக கொண்டு நடத்தும் விழாக்களின் நடுவில் இளங்குழந்தைகளின்

வாழ்க்கை சங்க இலக்கியங்களைச் சான்றாக கொண்டு சிறந்து விளங்க வேண்டுவதற்காக திரு. எல்ல. கிருஷ்ணமூர்த்தி அண்ணன் அவர்களால் நடத்தப்படும் இந்த “வாழ்வியல் இலக்கிய பொழில்” அமைப்பு நடத்தும் இவ்விழா சிறப்பாக நடக்கவும், அவருக்கு உறுதுணையாக இருக்கும் இவ்வமைப்பின் ஏனைய கவிஞர் பெருமக்களுக்கும், குறிப்பாக இவ்வமைப்பில் உள்ள செல்லக் குழந்தைகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள். சங்க இலக்கியங்களைப் படித்து நம் முன்னோர்களின் வழி நடந்தால் ஒவ்வொருவருக்கும் வெற்றி நிச்சயம்.

**சிங்கப்பூர்**

14-09-2018

என்றும் அன்புடன்

**கவிஞர் கற்பகவள்ளி துரைராஜ்**

## 28-01-2018 அன்று பொங்கல் விழாவில் சில காட்சிகள்.....



ஜீவஜோதிகா மற்றும் அன்யா நாட்டியம்



சமூக மன்ற ஆலோசகர் மற்றும்
இந்திய நற்பணிச் செயற்குழு தலைவர்



வாழ்வியல் இலக்கியப் பொழில்
குடும்பத்தினர் பொங்கல் வைத்தபோது




பச்சரிசி பொங்கல் கவிதை
பாடலாக அரங்கேறியபோது



# முதலாம் ஆண்டுவிழா நல்வாழ்த்துகள்

**இரா. வெங்கடேசன்**

சிங்கப்பூரில் தமிழ் அமைப்புகள் நிறைய உள்ளன. இருப்பினும் கடந்த ஓராண்டு காலமாக சிங்கப்பூர் தமிழ் அமைப்புகளில் ஒன்றான “வாழ்வியல் இலக்கியப் பொழில்” சார்பாக இங்கு வசித்து வரும் இளஞ்சிறார்கள் முதல் குடும்பத்தார் அனைவருக்கும் குறிப்பாக வளமான, தரமான வாழ்வியல் நுணுக்கங்களைத் திரட்டி தமிழர்களுக்குத் தேவையானவற்றையும், அவசியமான விஷயங்களையும் வழங்கி வருகின்றது.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய உயரிய நூல்களையும், திருக்குறள், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் வழியாக பல நல்ல செய்திகளையும் வழங்கி வரும் தமிழ்ப்பணி மேன்மேலும் சிறக்கவும், சிறுவர்கள் நாடகம் முதல் பெரியவர்கள் பட்டிமன்றம் வரை மிகவும் எளிய முறையில் புரியும்படியாகவும் நடத்தி வருகின்றது.

இது வாழ்வியல் இலக்கியப் பொழிலின் கூட்டு முயற்சியால் மட்டுமே சாத்தியம். வாழ்வியல் இலக்கியப் பொழில் தொடர்பான நிகழ்ச்சிகளை வலைப்பக்கம் மற்றும் முகநூல் வழி கண்டுகளிக்க வழிவகைச் செய்துள்ளது போற்றுதற்குரியது. இந்த மாபெரும் அமைப்பினை முன்னின்று நடத்திவரும் பாவலர் எல்ல.கிருஷ்ணமூர்த்திக்குப் பாராட்டுகள். அவருடன் இணைந்து அயராது பாடுபடும் அனைவருக்கும் வாழ்த்துகளைக் கண்டிப்பாக தெரிவித்தே ஆகவேண்டும். மேலும் தமிழ்மொழியை வாழும் மொழியாகவும், தொடர்ந்து நிலைக்கவும் இம்மாதிரியான அமைப்பு அயராது பணியாற்றி ஒருவருடத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

வாழ்வியல் இலக்கியப் பொழிலின் தமிழ்ப்பணி மேலும் பல்லாண்டுகள் தொடரவும், வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா, பவளவிழா, முத்துவிழா, நூற்றாண்டுவிழா முதலியனவற்றையும் சிறப்புற நடத்தவும் வாழ்த்துகள்!

**சிங்கப்பூர்**
**14-09-2018**

அன்புடன்,
**இரா.வெங்கடேசன் & வெ.சுமதி குடும்பத்தினர்**



# வாழ்த்துச் செய்தி

**திருமதி தீப்கா வினேஷ்**

வாழ்வியல் இலக்கியப் பொழில் மீதான எனது அனுபவத்தை எழுதும் முன் தாய் தமிழுக்கு என் நன்றியைச் சமர்ப்பிகின்றேன். பெயருக்கு ஏற்றாற்போல் இந்தப் பொழில் வாழ்வை மேம்படுத்திக்கூடிய நமது தமிழ் இலக்கியக் கூற்றுகளைப் பொழிந்து கொண்டிருக்கின்றது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. என் பள்ளிப் பருவத்திலிருந்தே எனக்கு தமிழின் மீது ஆர்வம் அதிகம், இருப்பினும் கல்லூரிப் பாடங்களும் பிறகு என் கணினி துறை தொடர்பான பணிச்சுமையும் என் தமிழ் ஆர்வத்திற்கு முட்டுக்கட்டையாய் இருந்தன.

திருமனத்திற்கும் பின் முற்றிலும் வேறுபட்ட சிங்கப்பூர் வாழ்க்கை. அந்தச் சமயத்திலே என் தோழி மூலமாக வாழ்வியல் இலக்கியப் பொழிலில் இணைந்தேன். அன்று முதல் இன்று வரை மாதந்தோறும் வருகின்ற இரண்டாவது சனிக்கிழமைக்காகக் காத்திருப்பேன். முதல் முறையாக எனக்கு தொகுத்து வழங்கும் வாய்ப்பை அளித்தபோது எழுந்தது என் தமிழ் ஆர்வம். மீண்டும் அதனுடன் எனக்கிருந்த மேடை பயமும் களைந்தது. ஒவ்வொரு மழலையர்களும் உதிர்த்த தமிழ்ச் சொற்களும், இலக்கியப் பாடல்களும் அவர்கள் உதிரத்திலேயே தமிழ் கலந்திருப்பதை உறுதி செய்த்து. பாரதியாரின் பாடல்

***"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன்***
***வந்து பாயுது காதினிலே"***

இவர்களுக்கு மிகப் பொருத்தம். பெற்றோர்களின் இலக்கியச் செய்யுள்களுக்கான விளக்கம் என்னையும் அவற்றைக் கற்றறிவதற்கான ஆர்வத்தை தூண்டியது. அதன் பயனாக முதுமொழிக்காஞ்சி, நாலடியார், நான்மணிக்கடிகை போன்ற நூல்களை வாசித்து வருகிறேன். ஒருநாள் பட்டிமன்றத்தில் பேசும் வாய்ப்பும் கிட்டியது. பிரிந்திருந்த தமிழன்னை மடியில் நான் மீண்டும் ஏறி அமர்ந்துகொள்ள வாய்ப்பளித்த வாழ்வியல் இலக்கியப் பொழிலுக்கு என் மனமார்ந்த நன்றிகளும் மேன்மேலும் வளர மகிழ்ச்சி.

**சிங்கப்பூர்** — **திருமதி தீபிகா வினேஷ்**

**11-09-2018**



# வாழ்த்துச் செய்தி

**திருமதி உஷா கிருஷ்ணமூர்த்தி**

வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பில் நிகழ்ச்சிகளை நடத்திவரும் பாவலர் எல்ல. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் மற்றும் அனைத்து செயலவைக்குழு உறுப்பினர்களுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிங்கப்பூரில் பல்வேறு தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தாலும் குழந்தைகளை மேடையேற்றி பல்வேறு சங்க கால நூல்களான ஆசாரக்கோவை, நான்மணிக்கடிகை, நாலடியார், திருக்குறள் போன்ற நூல்களை ஆழ்ந்து படிக்க உதவியாக இருந்து வருவதே பாராட்டுக்குரியது.

மேலும், நன்னெறி நூல்களான மூதுரை, விவேக சிந்தாமணி முதலானவை கூறும் வாழ்வியல் நெறிகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பை ஏற்படுத்துவது சிறப்பாகும். குறிப்பிட்டுச் சொல்லப்படும் அரியப் பல செய்திகளை அறிவதில் மட்டற்ற மகிழ்ச்சி, குறிப்பாக, கபிலரின் குறிஞ்சிப்பாட்டில் வரும் 99 வகை மலர்களின் பெயர்களை முதன்முறையாக அறிந்தபோது பேருவகைக் கொண்டேன்.

வாழ்வியல் இலக்கியப் பொழில் சிறந்து விளங்க இறைவனை வேண்டுகிறேன். தமிழ் வாழ்க !

**சிங்கப்பூர்** **உஷா கிருஷ்ணமூர்த்தி**

**18-09-2018**



# வாழ்த்துச் செய்தி

**திருமதி துளசிமணி சத்தியமூர்த்தி**

*"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்*
*இனிதாவது எங்கும் காணோம் "*

என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க, தமிழ் மொழியை ஆட்சி மொழிகளுள் ஒன்றாகக் கொண்டது சிங்கப்பூர். அத்தகைய சிங்கப்பூரில் ஏராளமான தமிழ் அமைப்புகள் உள்ளன. அதில் நம் "வாழ்வியல் இலக்கிய பொழில்" அமைப்பும் ஒன்று. மற்ற அமைப்பில் இருந்து வாழ்வியல் இலக்கிய பொழில் எப்படி வேறுபடுகிறது என்றால், இதில் பெற்றோரும், குழந்தைகளும் சேர்ந்து பங்கு கொள்கின்றனர். சில தமிழ் அமைப்புகள் நடத்தும் நிகழ்ச்சி பெரியவர்கள் மட்டுமே கலந்து கொள்ளும்படி உள்ளது. இன்னும் சில அமைப்புகள் தமிழ் மொழி விழாவின் போது மட்டுமே குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்கிறது. அதாவது போட்டிகளை நடத்துகிறது.

ஆனால் நம் "வாழ்வியல் இலக்கிய பொழிலோ" மாதா மாதம் குழந்தைகளை மேடை ஏற்றி, பெற்றோர்களுக்கு மகிச்சியையும், குழந்தைகளுக்கு தன் நம்பிக்கையும்,மேடை பயத்தையும் போக்குகிறது. குழந்தைகள் மேடை ஏறி சங்க இலக்கியம் பற்றி பேசும் போதும், நாடகங்களில் நடிக்கும் போதும் அளவில்லா மகிழ்ச்சி பெற்றோருக்கு, வருணிக்க வார்தைகளில்லை. மாதம் ஒரு முறை தமிழ் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து, படித்து தாம் அறிந்த தமிழ்ச் செய்திகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொள்ளும் போது மட்டற்ற மகிழ்ச்சி.

முதல் நிகழ்ச்சிக்கு நான் வரும் போது, "சங்க இலக்கியம்" என்ற வார்த்தை மட்டுமே எனக்கு தெரியும். அதன் பிறகு ஒவ்வொரு மாத நிகழ்ச்சியின் வாயிலாக சங்க இலக்கிய நூல்கள் என்னென்ன , அதன் முக்கியத்துவம் என்ன என்பதையும், இதை ஏன் இந்த இயந்திர வாழ்க்கைச் சூழலில் நம் குழந்தைகளிடம் எடுத்து செல்ல வேண்டும் என்பதையும் புரிந்தும் தெரிந்தும் கொண்டேன் .

வாழ்வியல் இலக்கிய பொழில் சாரலில் நனைந்ததினால் தான் என்னவோ, நாட்கள் சென்ற வேகம் தெரியவில்லை. அதற்குள் ஒரு வருடம் ஓடி விட்டது. இந்த முதலாமாண்டு நினைவு மலரில் என் எண்ணத்தை வார்த்தைகளாகச் சமர்பிப்பதில் மிக்க மகிழ்ச்சி.

**சிங்கப்பூர்** **துளசிமணி சத்தியமூர்த்தி**
**15-09-2018**



# வாழ்த்துச் செய்தி

**திருமதி பவித்ரா கண்ணன்**

வாழ்வியல் இலக்கியப் பொழிலின் தலைவர் பாவலர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு எனது குடும்பத்தினரின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துகள். நிகழ்ச்சியின் ஆரம்ப காலத்திலிருந்து நான் பங்கு பெறுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சி. இந்த நிகழ்ச்சியின் மூலமாக சங்க இலக்கியத்தைப் புரட்டி பார்ப்பது என்பது எங்கள் வாழ்க்கையின் விடுபட்ட, பல விடுவிக்கப்பட வேண்டிய அற நெறிகளைப் புரட்டி பார்ப்பதாக உள்ளது. குழந்தைகள் சிறு வயதிலிருந்தே, தமிழின் எழுத்துக்களைப் படிப்பதற்கு முன்பாகவே சங்க இலக்கியச் செய்திகளை அறிந்துகொள்ளவும் அதை மேடை ஏறி அரங்கேற்றவும் நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது.

குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் பல வாய்ப்புகள். குறிப்பாக, நான் ஆசாரக்கோவை என்ற நூலைப் பற்றி அறிந்துகொள்ள வைத்த நிகழ்ச்சி. நாங்கள் ஏற்கனவே அறிந்த உண்ணும் முறைகளும் உண்ணக்கூடாத முறைகளும், ஆசாரக்கோவையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லப்பட்டுள்ளது என்பதை அறிந்து வியந்தேன். நான் தமிழை மீண்டும் படிக்க, நானும் எனது மகளும் தமிழால் முன்னேற, தமிழை முன்னேற வித்திட்ட நிகழ்ச்சி என்பதில் பேரானந்தம்.

நிகழ்ச்சி மேலும் செழிக்க எங்களது பிரார்த்தனைகள். வாழ்க தமிழ்!!! வளர்க வாழ்வியல் இலக்கிய பொழில்!!!

**சிங்கப்பூர்**

**15-09-2018**

**அன்புடன்**
**பவித்ரா கண்ணன்**



# வாழ்வியல் இலக்கிய பொழிலில் கற்றதும் பெற்றதும்

ப. கலியபெருமாள்

தமிழ் மொழியை எழுதுவதும் படிப்பதும் பள்ளி பருவத்தோடு முடிந்துவிட்டது என்றெண்ணி இருந்த என்னை, அல்ல அல்ல அது தவறு என்று உணர்த்தி, என் தாய்மொழி தமிழை புதுப்பொலிவுடன் அதுவும் சங்க இலக்கியதுடன் திரும்பி பார்க்க வைத்த இடம் வாழ்வியல் இலக்கிய பொழில் எனும் இலக்கிய பூஞ்சோலை.

ஒவ்வொரு மாதாந்திர நிகழ்ச்சியிலும் புதிது புதிதாக பல தமிழ் இலக்கிய கருத்துகளைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பு கிடைப்பதாக நான் கருதுகிறேன். சங்ககால இலக்கியத்தைக் கற்றறிதல் மிகவும் கடினம் என்று எண்ணிக்கொண்டிருக்கிற பலரில் நானும் விதிவிலக்கல்ல. அத்தகைய தமிழர்களின் பாரம்பரிய பொக்கிஷங்களை வாழ்வியல் இலக்கிய பொழிலின் குடும்பத்தினரைச் சேர்ந்த பெரியவர்கள் மட்டுமல்லாமல், சிறியவர்கள் படைக்கும் பாடல், கதை, மாறுவேடம் மற்றும் நாடகங்கள் வழியாக எளிமையாகத் தெரிந்து கொள்ள வழிவகுப்பது வாழ்வியல் இல்லகிய பொழிலின் சிறப்பு என்பது எனது கருத்தாக பதிவு செய்கிறேன்.

மற்றவர்களின் படைப்புகளிலிருந்து கற்றறிதல் ஒரு புறம் இருக்க, தனிப்பட்ட முறையில், கடந்த சில நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கியது மிக சிறந்த மற்றும் வித்தியாசமான அனுபவமாகவே கருதுகிறேன். நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குதல் என்பது ஒரு குறிப்பிட்ட படைப்பைப் பற்றி அல்லாததால், தமிழ் மொழியைப் பற்றி, அதிலும் குறிப்பாக சங்க இலக்கியத்தைப் பற்றி அறிய வேண்டும் என்ற ஒரு ஆர்வத்தையும் மற்றும் உந்துதலையும் என்னுள் வாழ்வியல் இலக்கிய பொழிலின் வாயிலாக கிடைக்கப்பெற்றேன் என்பதை சொல்வதில் எனக்கு மகிழ்ச்சியே!

எல்லாவற்றிற்கும் மேலாக, பல்வேறு தட்பவெட்ப நிலையிலிருந்து வந்து சரணாலயத்தில் ஒன்று கூடும் பறவைகள் போல், வெவ்வேறு பின்னணியில் இருந்து வந்தாலும் தமிழ் மொழியின் மீது கொண்ட ஆர்வத்தினாலும் மற்றும் தமிழ் மொழியை மேன்மேலும் அறிந்துகொள்ளும் நோக்குடன் ஒன்றுசேரும் அனைத்து நல்ல உள்ளங்களுடைய நட்பு வாழ்வியல் இலக்கிய பொழில் எனும் தன்னலமற்ற அமைப்பின் மூலமாக கிடைத்ததைப் பெருமையாகக் கருதுகிறேன்.

முதலாம் ஆண்டுவிழா காணும் வாழ்வியல் இலக்கிய பொழில் எனும் தமிழ் அமைப்பு மேன்மேலும் வளர்ந்து பல நூற்றண்டு விழாக்கள் காண என் சார்பாகவும் மற்றும் வாழ்வியல் குடும்பபத்தினர் சார்பாகவும் மனமார்ந்த வாழ்த்துகள்.

***வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!***

***வளர்க வாழ்வியல் இலக்கிய பொழில்!***

**சிங்கப்பூர்**

**அன்புடன்**

**10-09-2018**

**ப. கலியபெருமாள்**

**10-02-2018 அன்று 4ஆவது சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....**



பக்தி பாடல் வழங்கிய காருண்யா


கதைப்பாடல் வழங்கிய நிக்கிதா


திருக்குறள் வழங்கும் பிரமோத்வர்ஷன்


‘அகத்திணை’ என்ற தலைப்பில்
சிறப்புரையாற்றும் புலவர் மு.சந்திரசேகரன்


மாதாந்திர நிகழ்ச்சிகளை
படமாக்கும் திரு. சரவணனன்


நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள்

மேலும் சில காட்சிகள்... பக்கம் 61



# வசந்தங்கள் வந்து சேரும் நிழல்

கவிஞர் முத்து. இராஜசேகரன்

வாழ்வியல் இலக்கிய பொழில்
வசந்தங்கள் வந்து சேரும் நிழல்..

அகவை ஒன்றை அடைந்தது
அன்பை நாளும் விதைக்குது..

தமிழர் பண்பாடு காத்திடும் மாத நிகழ்
பாவலர் அமைந்திட்ட பாங்கான
பற்பல திறந்த மடல்..

எண்ணங்கள் இங்கு இனிக்கும்
இன்னிசை குயில்களும் ஒலிக்கும் ..

பண்ணிசை பலவும் படைக்கும்
பாங்குடன் நிகழ்ச்சிகள் நடக்கும் ..

மழலைகள் கூட்டம் கூடுது
மகிழ்ச்சிகள் எங்கும் பரவுது...

இலக்கியச் சுவைகள் ஏராளம்
மருத்துவ தகவலும் தாராளம்..

அன்பும் நிறையும் இங்கு
அகமும் மகிழும் நன்கு..

மனதுக்கும் மட்டற்ற நிகழ்வுகள்
வயிற்றுக்கும் பற்பல உணவுகள் ...

வாழ்வியல் இலக்கிய பொழில் வசந்தமும் வீசிட
வருடங்கள் பல கடந்திட வாழ்த்துகள் .,.

சிங்கப்பூர்
15-09-2018

என்றும் அன்புடன்,
**முத்து. இராஜசேகரன்**



# வாழ்த்துச் செய்தி

**திருமதி ஜெயப்ரியா ஸ்ரீராகவன்**

தமிழன்னைக்கு வணக்கம். நமது வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பை உருவாக்குவது பற்றி பாவலர் ஐயா, நாங்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்துரையாடியது ‘நேற்று நடந்தது’ போல் உள்ளது. அதற்குள், தொடங்கி முதலாம் ஆண்டுவிழா நடக்கப் போவதை நினைத்தால் பெருமையாக உள்ளது.

குழந்தைகளுக்குத் தமிழார்வத்தை ஊட்டும் அமைப்பாக உள்ளதும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் ஆர்வமுடன் தமிழ் நிகழ்ச்சியை மாதந்தோறும் படைப்பதைப் பெருமிதத்தோடு பார்ப்பதைக் காணுவதும் மட்டற்ற மகிழ்ச்சி. பிரதி மாதமும் நமது அமைப்புக்கு வருகை புரிகின்ற மிகுதியான தமிழ் ஆர்வலர்களின் எண்ணிக்கையே வெற்றிக்கான சான்று.

எத்தனையோ வேலை பளுக்கிடையிலும் நமது அமைப்பின் செயலவைக்குழு உறுப்பினர்கள் தாமாக முன்வந்து அமைப்பின் வேலைகளைப் பகிர்ந்து கொண்டு தமிழுக்குத் தொண்டாற்றும் அவர்களின் அன்பு போற்றுதற்குரியது.

நமது வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பு மேன்மேலும் வளரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழ் வாழ்க !

**சிங்கப்பூர்**
**20-09-2018**

**ஜெயப்ரியா ஸ்ரீராகவன்**



# வாழ்த்துச் செய்தி

**திரு. இராஜரெத்தினம்**

சங்க இலக்கியம் பற்றி பெரியவர்களால் மட்டுமே மேடைகளில் பேசமுடியும் என்பதற்கு மாற்றுக் கருத்தாக எங்களாலும் முடியும் என்று சிறுவர்களையும் களம் இறக்கிய வாழ்வியல் இலக்கியப் பொழில் ஒவ்வொரு சிறுவர்களுக்கும் ஊன்றுகோலாக உள்ளது.

இந்தப் பொழிலில் நனைந்து வளர்கிற சிறுவர்களுக்கு விழுதுகளாய் உள்ள வாழ்வியல் இலக்கியப் பொழில் அனைத்து தடைகளையும் தகர்த்து எறிந்து விட்டு பொழிந்து கொண்டேயிருக்க என்னுடைய வாழ்த்துகள்.

முதலாம் ஆண்டு விழாவில் இந்த வாழ்வியல் இலக்கியப் பொழில் தொடர்ந்து இந்த சிராங்கூன் சமூக மன்றத்தில் பொழிய உங்கள் அனைவரின் வான் நோக்கிய முகங்கள் இந்த வாழ்வியல் இலக்கியப் பொழிலின் நம்பிக்கை நட்சத்திரம்.

சிங்கை
20-09-2018

என் முகத்துடன்
**இராஜரெத்தினம்**

## இலக்கியச் சங்கமம் - 2018 விழா அழைப்பிதழ்...








# வாழ்த்துச் செய்தி

கி.அறவாழி, நோர்வே

சிங்கையின் நடுவில்
சிரங்கூன் மன்றத்தில்
வாழ்வியல் இலக்கியத்தின்
வரலாற்றுப் பொழிவில்
அன்னைத் தமிழை
அரியணையில் வைத்து
மழலை மொழி முதல்
சங்கத் தமிழ் வரை...
குயிலின் பாடலும்
மயிலின் நடனமும்
அறிஞர்தம் உரைவீச்சும்
மருத்துவக் குறிப்பும்
மன மகிழ் நிகழ்வும்
இளம் குளிர் காற்றில்
இதயத்தை நனைக்க
இன்பம் பொங்கிட
இணைந்தே நடத்தும்
கிளம்பிற்றுக் காண்
தமிழ்ச் சிங்கக் கூட்டத்தை
வாழ்த்துவதில் காண்
மட்டற்ற மகிழ்ச்சி!!

நோர்வே
20-09-2018

கி. அறவாழி



# முதல் அகவை தின வாழ்த்துரை

**பொறியாளர் ச. குமரேசன்**

வாழ்வியல் இலக்கியப் பொழில் குடும்ப உறவுகளுக்கு பணிவான வணக்கம்!

***"பொய் அகல, நாளும் புகழ் விளைத்தல் என் வியப்பாம்?***
***வையகம் போர்த்த, வயங்கு ஒலி நீர் - கையகலக்***
***கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளோடு***
***முன் தோன்றி மூத்த குடி நம் தமிழ்க்குடி!" (புறப்பொருள் வெண்பா மாலை)***

கண்ணிமைக்கும் கணநேரத்தில் காததுரம் கடக்க கூடிய கணினி காலம் இன்று! இன்றளவும் மங்காத புகழோடு, நிலையில்லாத மண்ணில் நிலைத்து நிற்கும் தன்னிகரில்லாத் தனிச்செம்மொழி நம் தாய் மொழி-தமிழ் மொழி! தொல்காப்பியம் போன்ற தொன்மையான தமிழ் இலக்கண நூல்களே நமக்கு சான்றாக உள்ளது நம் மொழியின் பெருமை !

இன்றைய இளையச் சமுதாயத்தினருக்கு நம் வரலாற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துவதில் நமக்கு பெரும் பங்கு இருக்கிறது! நம்மை ஈன்ற அன்னையின் பெருமையை பற்றி பேசி கொண்டாடும் நாம், நம் தமிழன்னையின் பெருமையை (தொன்மையையும்) உணர மறந்து விடுகின்றோம்! இந்த மனக்குறை சற்றே குறையத் தொடங்கியிருக்கின்றது, ஆம், தடம்மாறி தடுமாறி செல்லும் இளையச் சமுதாயம் தரணி எங்கும் தடம் பதிக்க தமிழ் இலக்கியங்கள் வாயிலாக தளம் அமைத்து கொடுத்திருக்கும் பாவலர் அய்யா எல்ல. கிருட்டினமூர்த்தி அவர்களது சீரிய முயற்சியால் உருவானது "வாழ்வியல் இலக்கியப் பொழில்" எனும் எழில் மிகுந்த தமிழ்க்குடும்ப அமைப்பு. இந்த அமைப்பு இளம் சிறார்களுக்கும் இல்ல நிர்வாகிகளுக்கும் சங்க இலக்கியம் மற்றும் அதன் சாராம்சங்கள் பற்றி தெரிந்து, புரிந்து, மகிழ்ந்து இயம்ப ஊக்குவிக்கின்றது! சிராங்கூன் சமூக மன்றம் மற்றும் தமிழ் மக்களின் நல் ஆதரவில் இம்மன்றம் மிகச் சிறப்பான நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

ஆச்சர்யம்! ஆனால் உண்மை!! இம்மன்றக் கூட்டம் நடைபெறும் நாட்களில் தவறாது தமிழன்னை தன்னருளை மாரியாய் வாரி வாரி வழங்குவது கண்டு வியப்புற்றுள்ளேன்.

உயர்வெண்ணம் உனைவுயர்த்தும்' என்ற உயரியக் கொள்கையுடன் வாழும் பாவலர் எல்ல கிருட்டிணமூர்த்தி அவர்களது உள்ளத்தில் உதித்த எண்ண விதையான "வாழ்வியல் இலக்கியப் பொழில்" சிங்கை தமிழ் உள்ளங்களில் முளைத்து, துளிர்த்து, தளிர்த்து, தழைத்து இருக்கின்றது! பாவலரின் விடாமுயற்சியாலும், பற்பல நல்ல உள்ளங்களின் ஒத்துழைப்பாலும், சிராங்கூன் சமூக மன்ற உதவியாலும், 11 மாதங்கள் கடந்து தனது முதல் அகவையில் அடி எடுத்து வைக்கும் "வாழ்வியல் இலக்கியப் பொழில்" பல்லாண்டு நிலைத்திட பரம்பொருளை சிரம் தாழ்த்தி வேண்டுகின்றேன். வாழ்க வளமுடன்!

சிங்கப்பூர்
20-09-2018

அன்புடன்
**ச. குமரேசன்**



# வாழ்த்துச் செய்தி

முனைவர் பா.ராமநாதன்

கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த மொழி தமிழ் மொழி! மூத்தக்குடி தமிழ்க்குடி! வாழ்வியலுக்கு உகந்த சிந்தனைத் திறத்தோடு பல ஆக்ககரமான உணர்வுகளுடனும் கருத்துக்களுடனும் எந்த காலத்திற்கும் உகந்த இலக்கிய வளமும் சிறப்பும் கொண்ட செந்தமிழாம் நம்மொழி தற்போது செம்மொழி எனும் உயர்நிலைத் தகுதியடைந்துள்ளது.

"யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" எனும் கணியன் பூங்குன்றனார் பாட்டிற்கிணங்க சிங்கப்பூர் வாழும் தமிழர் வாழ்வு அமையப்பெற்றுள்ளது மிகவும் சிறப்பான ஒன்று. புதுமைக்கவி பாரதி பாடியது போல் "திரைகடலோடியும் திரவியம் தேடு" மற்றும் "சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்!" என்று வாழ்வுபூர்வமாக வாழ்ந்துகாட்டும் சமூகமாக இன்று சிங்கப்பூர் தமிழ்ச் சமூகம் விளங்கி வருகிறது.

"கற்றது கைம்மண் அளவு! கல்லாதது உலகளவு!" எனும் ஔவையாரின் வாக்கிற்கேற்ப இன்று வாழ்நாள் கல்வியின் அவசியம் உணரப்பட்டுள்ளது. அதற்கேற்ப சிங்கப்பூரில் அரசாங்கம் ஊக்கத்தொகையுடன் கூடிய புத்தாக்கத்திறன் மேம்பாடு பயிற்சி வகுப்புக்களை நடத்திவருவது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று.

உலகப்பொது மறையாம் "திருக்குறள்" இன்று உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அனைத்து மக்களின் வாழ்வியலுக்கேற்ப பொதுவான கருத்துக்களை எக்காலத்திற்கும் பொருந்தும் வகையில் எடுத்துரைக்கின்றது.

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" என்ற திருக்குறளுக்கேற்ப சிங்கப்பூர் அரசாங்கம் மக்களுக்குகந்த வகையில் சிறப்பான கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், பாதுகாப்பு, அடிப்படை உட்கட்டமைப்பு, வாழ்வியல் திறன் மேம்பாடு, மத நல்லிணக்க உணர்வு, அனைத்துலக நட்புணர்வு போன்றவற்றில் மேன்மைமிகு திட்டங்களையும் வரைமுறைகளையும் கொண்டு உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இத்தகைய வளம் பல கொண்ட தமிழ் மொழியின் சிறப்பை சிங்கப்பூர் தமிழ்ச் சமூகம் உணர்ந்து பயன் பெறும் வகையில் "வாழ்வியல் இலக்கியப் பொழில்" தமிழமைப்பு தமிழிலக்கியம் சார்ந்த நம் கலாச்சாரம், பண்பாடு, அரசியல், நாகரிகம், வாழ்வியல் முறைகள் ஆகிய துறைகளில் கல்வி, கேள்வி, ஞானம் வளம்பெற கவிதை, கட்டுரை, பேச்சு, இசை, நாட்டியம் ஆகியவற்றில் போட்டிகள் மற்றும் கருத்தரங்குகள், தன்முனைப்புத்திறன் பயிற்சி, தன்னார்வ வளர்ச்சிக் கூட்டங்கள் நடத்தி இங்குள்ள பள்ளி மாணவர்களையும் மற்றும் இலக்கியத் திறனார்வலர்களையும் ஊக்குவித்து வருவது மிகவும் பாராட்டுதலுக்குரியது. இத்தகைய சமூக அக்கரை கொண்ட செயல்பாடுகள் தமிழ் மொழி வளர்ச்சி, தமிழர் வாழ்வு, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை அடுத்தடுத்த தலைமுறைக்கு வழிவழியாக தடையின்றி கொண்டு சேர்க்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சிங்கப்பூர்
20-09-2018

**பாலகிருஷ்ணன் ராமநாதன்**



# சித்த மருத்துவம்

கவிஞர் சாவித்திரி சில்வராஜ்



தமிழ்மொழியின் தொன்மை என்பது அதன் பயன்பாட்டில் மட்டுமே புலனாகும். அவ்வகையில் தமிழ்மொழியின் பயன்பாடு சித்தர் காலம் தொட்டு பல்வேறு வழிகளில் நன்னெறிகளையும் நோய் தீர்க்கும் மூலிகைகளையும் இனம் கண்டு மனித குலத்தைப் பாதுகாத்து வருகின்றன. கடந்த ஓராண்டாக வாழ்வியல் இலக்கியப் பொழில் நடத்தும் நிகழ்ச்சிகளில் எண்ணற்ற சித்த மருத்துவக் குறிப்புகளை வழங்கிட வாய்ப்பு கிடைத்ததை தொடர்ந்து இங்கு சில முக்கிய குறிப்புகளைக் கொடுக்க பேராவல்.

**1. கண் கோளாறுகளால் வரும் தலைச்சுற்றலுகு:**

திரிபாலா சூரணத்தை இரவில் எடுத்து சில துளிகள் தேனையும் அதிக அளவு நெய்யையும் சேர்த்து குழைத்து நக்கிச் சாப்பிட்டு இரவில் படுத்து உறங்க, தலைச்சுற்றல் நிற்கும். கண்களுக்கு குளிர்ச்சியையும் வலிமையையும் கொடுக்கும்.

**2. வாந்தி நிறுத்துவதற்கு:**



சீரகத்தூள் - 3 சிட்டிகை

திப்பிலித்தூள் - 3 சிட்டிகை

சுட்ட மயிலிறகின் தூள் - 3 சிட்டிகை

தேன் - 1/2 ஸ்பூன்

இவற்றை நன்றாக குழைத்து சாப்பிட வாந்தி நிற்கும்.

**3. அடிபட்ட காயம் சரியாக:**

மூக்கிரட்டை இலையைக் கொண்டுவந்து அரைத்து காயத்தில் கட்டி வந்தால் பிளந்த காயம் கூட ஒன்று சேர்ந்துவிடும். உப்பு, மிளகாய் சம அளவு எடுத்து தூள் செய்து வேப்ப எண்ணெய் விட்டு வதக்கி அதை வைத்துக் கட்டினால் அடிபட்ட புண் காயம் சரியாகிவிடும். ஆனால், மேற்கண்ட மருந்தைக் வைத்துக் கட்டினால் மிகுந்த எரிச்சலைத் தரும். பொறுத்துக்கொள்வது முக்கியம்.

**4. நீரடைப்பு சரியாக:**

நீர் முள்ளி, நெருஞ்சில், சுரைக்கொடி வேர், சோம்பு, சரக்கொன்றை, கடுக்காய், நெல்லிமுள்ளி, தான்றிக்காய் இவைகளை சம எடை எடுத்துப் போட்டு குடிநீராக்கி சுண்டவைத்து வடிகட்டி மூன்று வேளை குடித்தால் சரியாகிவிடும்.

**5. சூலை நோய் சரியாக:**

சூலை என்பது வயிற்றில் ஏற்படும் ஒருவகை வலியாகும். காக்கிரட்டன் வேர், சிலதைவேர், சுக்கு, கடுகு ரோகினி, திராட்சைப் பழம், வகைக்கு 10 கிராம் அடுத்து எட்டு ஆழாக்கு தண்ணீரில் போட்டு காய்ச்சி சுண்ட வைத்து (ஒரு ஆழாக்கு ஆகும் வரை) ஒரு வேளைக்கு கால் ஆழாக்கு குடித்து வந்தால், கழிச்சல் உண்டாகி சூலைநோய் வேகம் குறையும்.

**6. உடல் அரிப்பு:**



அரை ரூபாய் எடை நீட்டிமுத்து, அரை ரூபாய் எடை கசகசா, அரை ரூபாய் எடை கருஞ்சீரகம், ஒரு ரூபய் எடை தேங்காய் பத்தை இவைகளை ஈரம் இல்லாமல் அம்மியில் மைபோல் அரைத்து முழு உடம்பிலும் பூசி 1 மணி நேரம் ஊரவைத்து குளிக்க வேண்டும். ஒருவாரம் இப்படி குளித்து வர உடல் அரிப்பு மீண்டும் வராது.

**7. வீக்கம் சரியாக:**

வேப்பிலையை வதக்கி கட்டி வந்தால் வீக்கம் வடியும். நன்னாரி வேரை நீர் விட்டு களிம்பு போல் அரைத்து பற்றுப்போட்டு வந்தால் நீண்ட கால வீக்கம் வடிந்து விடும்.

**8. வாதநோய் சரியாக:**

பெரு நெருஞ்சி இலைகளை நிழலில் உலர்த்தி தூள்செய்து இரண்டு ஸ்பூன் பசும்பாலில் கலக்கிச் சாப்பிட்டால் வாதநோய் சரியாகும்.

**9. இடுப்பு பிடிப்பு சரியாக:**

பொடுதலை 35 கிராம்; பூண்டு 35 கிராம்; மிளகு 35 கிராம்; சுக்கு 35 கிராம் அரைத்து பாக்களவு உருண்டை செய்து காலையில் வாயில் போட்டு வெந்நீர் குடிக்கவும். ஒரு வாரம் சாப்பிட்டால் சரியாகிவிடும். புளி சேர்க்கக் கூடாது.



**10. மூல நோய் குணமாக:**

எட்டுவித மூல நோய்க்கும் வேப்ப விதையை மைபோல் அரைத்து பாக்களவு, காலை மாலை 40 நாட்கள் சாப்பிட பூரண குணம் தெரியும்.

**11. மூளைக்காய்ச்சல்:**

ஒரு கைப்பிடி இலந்தை இலை, 15 மிளகு, ஒரு பூண்டு பல் அரைத்து, காலை மாலை சாப்பிட்டால் போதும் மூளைக்காய்ச்சல் சரியாகும். உப்பு, புளி கட்டாயம் சேர்க்க்க் கூடாது.

**12. படர் தாமரை சரியாக:**

பப்பாளிக்காயைக் கீறினால் வெண்ணிறமான

பால் வடியும். அதையெடுத்துப் படர் தாமரையின் மீது தடவி வந்தால் சில நாட்களில் குணமாகி விடும்.



**13. நரை மயிர் கருக்க:**

கரிசலாங்கண்ணி 350 கிராம், உலர்த்தி தூள் செய்து 350 கொட்டைக் கரந்தையும் தூள் செய்து அரை ஸ்பூன் தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் நரை மயிர் கருக்கும்.

**14. தும்மல் தொடர்கிறதா:**

அகத்தி இலைச்சாறு, அகத்திப் பூச்சாறு சமஅளவு கலந்து நாசியின் மூலம் சில துளிகள் உறிஞ்சுவதால் நீங்காத தும்மல் நீங்கி விடும்.



**15. சூதக வாயு சரியாக:**

எள்ளும் பனைவெல்லமும் சேர்த்து சில நாட்கள் தொடந்து சாப்பிட சூதகம் ஒழுங்குப்பட்டு உடல் அழகும் பலமும் பெறும். கர்பிணிகள் இதைச் சாப்பிட்டால் கருச்சிதைவு ஏற்படும்.

**16. குஷ்ட ரோகம் சரியாக:**

மருதோன்றி செடியின் இளந்தளிர் மலர்ந்த பூக்கள் இடித்துச் சாறு பிழிந்து காலை மாலை அரை ஸ்பூன் வீதம் சாப்பிட்டு வந்தால், குஷ்ட ரோகம் மேலும் பரவாமல் தடுப்பதுடன் நீண்ட நாட்கள் உபயோகித்தால் பழைய உடல் நிலையை அடையலாம்.

**17. குன்ம ரோகம் சரியாக:**

இரண்டு கைப்பிடி வில்வ இலையை எட்டு மணி நேரம் ஊரவைத்து பிறகு நீரை வடிகட்டி குடித்து வந்தால் குன்ம ரோகம் (வலி) சரியாகி விடும்.

**18. குழந்தை இல்லையா:**

அரச மரத்து விதையைப் பசும் பாலில் அரைத்து, ஒரு டம்ளர் பாலில் கலந்து குடித்து வந்தால் போதும். இல்லையெனில் இலந்தை இலை ஒருபிடி, ஆறு மிளகு, இரண்டு பூண்டு இம் மூன்றையும் அரைத்து மாத விலக்கு காலத்தில் கொடுத்து வந்தால் கர்ப்பம் ஏற்படும்.

சிங்கப்பூர்
10-09-2018

**சாவித்திரி சில்வராஜ்**


ஆண்டுவிழா சிறக்க வாழ்த்துகிறோம்
With Best Complements
Taste of India
North & South Indian Cuisine
TOP 100
SINGAPORE
EXCELLENCE AWARD
2014
Food is Halal
Fine Dining
Outdoor
Catering
Services
Party Hall
(120 Pax)
Home Delivery
77, Rangoon Road, Singapore 218365
96, Owen Road, Singapore 218908
T: 6341 5158 | www.tasteofindia.sg



# இயன்முறை மருத்துவம் (பிசியோதெரபி)

**திருமதி யசோதா**
பிசியோதெரபிஸ்ட்

## ஆரோக்கிய பராமரிப்பு துறையில் இயன்முறை மருத்துவம்

பிசியோதெரபி என்பது அவர்களின் பரிசோதனை, மதிப்பீடு, நோய் கண்டறிதல் மற்றும் உடல் தலையீட்டுத் திறன் ஆகியவற்றின் மூலம் இயல்பான சிகிச்சையளித்தல் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றைக் குணப்படுத்துவதில் இயங்கும் பிசியோதெரபிஸ்டுகளால் நடத்தப்படும் ஒரு சுகாதார தொழில் ஆகும். இது சுறுசுறுப்பு, செயல்பாட்டுத் திறமைகள், உயிர் மற்றும் இயக்கத்தின் தரம் ஆகியவற்றை மேம்படுத்துவதில் உதவுகிறது.

**சிறப்புகள்:**

பிசியோதெராபியில் பரந்த அளவிலான விரிவான அறிவு பிசியோதெரபி தொழிற்துறையில் மிகவும் நிபுணத்துவம் வாய்ந்த வழியாகும்.

**எலும்பியல் பிசியோதெரபிஸ்ட்:** எலும்பு மற்றும் சதை சம்மந்தமான நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள்.

**நரம்பியல் பிசியோதெரபிஸ்ட்:** நரம்பியல் சீர்குலைவுகளால் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள். மூளையில் காயங்கள், பக்கவாதம், பெருமூளைச் சிதறுதல், பல ஸ்களீரோசிஸ், பார்கின்சன் நோய், முதுகுத் தண்டு காயம் மற்றும் அல்சைமர் நோய்கள் ஆகியவை ஒரு சில பெயர்களைக் கொண்டிருக்கின்றன.

**கார்டியோவாஸ்குலர் மற்றும் நுரையீரல் பிசியோதெரபிஸ்ட்:** நுரையீரல் சுரப்பிகள் மற்றும் மூச்சு பயிற்சியைச் சுத்தம் செய்வதன் மூலம் இதய நோயாளிகள் மற்றும் பிந்தைய கார்டியாக் அல்லது பிந்தைய நுரையீரல் அறுவை சிகிச்சை நோயாளிகளுடன் அவர்களது சகிப்புத்தன்மையையும் செயல்பாட்டு சுதந்திரத்தையும் மேம்படுத்துவதற்காக நபர்கள் நடத்துகிறார்கள்.

**முதியோருக்கான (Geriatric) சிகிச்சை மருத்துவர்:** அவர்கள் வயதான கோளாறுகள் அல்லது கீல்வாதம், ஆஸ்டியோபோரோசிஸ், புற்றுநோய், சமநிலை சீர்குலைவு, இயலாமை, அல்சைமர் நோய் மற்றும் இடுப்பு மற்றும் கூட்டு மாற்று போன்ற நோய்களுக்குப் பரந்த அளவிலான சிகிச்சை அளிக்கிறார்கள்.

**குழந்தை (Peadiatric) பிசியோதெரபிஸ்ட்:** பிறப்பு, வளர்ச்சி, நரம்புத்தொகுப்பு, எலும்பு

மற்றும் பெரு மூளை சம்மந்தமான நோய்கள் கொண்ட குழந்தைகளுக்குச் சிகிச்சை செய்கின்றனர்.

**விளையாட்டு (Sports) பிசியோதெரபிஸ்ட்:** விளையாட்டு காயங்களைக் குணப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்தல் ஆகியவற்றின் மூலம் விளையாட்டு வீரருடன் அவர்கள் முக்கிய பங்கைக் கொண்டுள்ளனர்.

**பெண்களின் ஆரோக்கிய (women's health) பிசியோதெரபிஸ்ட்:** நிணநீர், ஒஸ்டோபோரோசிஸ், இடுப்பு வலி மற்றும் சிறுநீரின் இயல்பான நிலைமைகள் போன்ற சிகிச்சைகள் கூடுதலாக பிரசவ கால மற்றும் பிரசவ காலங்களில் பெண்களின் ஆரோக்கியத்தில் வேலை செய்கின்றன.

**பிசியோதெரபி சிகிச்சை முறைகள்:** இவை இயல்பான இயக்கங்கள், தோரணைகள் மற்றும் நடவடிக்கைகள், குறைபாடுகளைத் தடுக்கின்றன, செயல்பாட்டை ஊக்குவிக்கின்றன, அபாயத்தைக் குறைக்கின்றன, ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், உடற்பயிற்சி மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துகின்றன

**மின்சிகிச்சை:** சிகிச்சைக்கு மின் ஆற்றல் பயன்படுத்துகிறது. மருத்துவ நிலைமைகள் குணமளிக்க உடலியல் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு உடல் சக்திகள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன.

**நுரையீரல் சிகிச்சை:** இது மேம்படுத்தப்பட்ட சுவாசத்திற்கானச் சுவாசத்தைச் சுத்தப்படுத்தும். நுரையீரல் வடிகால், ஆழமான சுவாச பயிற்சிகள், நிலைப்படுத்தல் போன்ற நுட்பங்கள் நுரையீரல் திறன் அதிகரிக்க பயன்படுகிறது. மூச்சுத் திணறல் குறைப்பு போன்றவை கொண்டு வருவதற்கு உடல் சக்திகள் இங்கு பயன்படுத்தப்படுகின்றன.


வளர்ந்த நாடுகள் முழுவதிலும் பிசியோதெரபி தொழிற்துறையின் வளர்ந்து வரும் நோக்கம் மற்றும் மக்களுடைய சுகாதார ஊக்குவிப்பு, தடுப்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு சேவைகள் ஆகியவைகள் மகத்தான நன்மைகளை மக்களுக்கு வழங்குகின்றன.

இவ்வாழ்வியல் இலக்கியப் பொழில் மணம் கமழும் செம்மொழியாம் தமிழ் மொழியுடன் இயன்முறை மருத்துவமும் இனிதே தொடர வாழ்த்திட விழைகிறேன்.

சிங்கப்பூர்
14-09-2018

**திருமதி யசோதா**

## 10-02-2018 அன்று 4ஆவது சந்திப்பிலிருந்து மேலும் சில காட்சிகள்.....



திருவள்ளுவரை வரைந்து விளக்கும் சர்வினி


நன்றியுரை வழங்கும் கவிஞர் முத்து. இராஜசேகரன்

## 23-02-2018 அன்று மஹா சிவராத்திரி விழாவில் சில காட்சிகள்.....


தேவாரப் பாடலோடு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தபோது


நிகழ்ச்சியைக் கண்டுகளித்தவர்களில் ஒரு பகுதியினர்


திருமூலர் இயற்றியப் திருமந்திரப் பாடலோடு சர்வினி


'முக்தி தரும் சிவராத்திரி' என்ற தலைப்பில் பவித்ரா கண்ணன்.


நினைவுபரிசினைப் பெறும் மாணவர்


நிகழ்ச்சியைக் கண்டுகளித்தவர்களில் சிலர்

## 10-03-2018 அன்று 5ஆவது சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....



'ஞான விநாயகனே..' என்ற
பக்திப் பாடலோடு கார்த்திகா



'ஒப்புரவு ஒழுகு' ஆத்திச்சூடி
கதையைக் கூறினார் கமலிகா



'விட்டுக் கொடுப்பவன் கெட்டுப்
போவதில்லை' கதை பிரஜித்



ஒரு குழந்தை பாடலோடு கவிஞர்
பி. மதியழகன் மற்றும் கவின்நிலா



'திருக்குறள் வேண்டும்' உரையுடன் சிவரிஷி

## 14-04-2018 அன்று 6ஆவது சந்திப்பு இலக்கியச் சங்கமம் - 2018 விழாவில் சில காட்சிகள்.....



விழாவில் கலந்துகொண்ட ஒரு பகுதியினர்



திருவள்ளுவராக சானா கான்



நெறியாளர்கள் பவித்ரா கண்ணன்
மற்றும் துளசிமணி



சிறப்பு விருந்தினர் மற்றும்
சிறப்பு பேச்சாளருடன்



நன்றியுரை வழங்கும் உஷா
கிருஷ்ணமூர்த்தி



சிறப்பு விருந்தினர் Ms Chan
Hui Yuh PBM உரை



கும்மியாட்டம் ஆடும் மகளிர் குழு



போட்டிகளில் வெற்றிப்பெற்ற
மாணவர்களுக்கு பரிசு



நாட்டுப்புறப் பாடலுக்கு
ஆடும் சிறுமிகள்



விழாவில் பங்கேற்றவர்கள்

## 12-05-2018 அன்று 7ஆவது சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....



தமிழ் வணக்கப் பாடல்



சங்கீதப் பாடலுடன் சம்ரிதா



குறிஞ்சிபாட்டில் வரும் 99 மலர்களின் பெயர்களை வழங்கும் ஜீவஜோதிகா



நெறியாளர்கள் கோமதி மற்றும் தீபிகா



பாரதியாராக ஸ்ரீவிகாஸ்



வேரும் விழுதும் படைக்கும் கோமதி மற்றும் பிரித்தீவ்



பிறந்தநாள் கொண்டாட்டம்



நிகழ்ச்சியைக் காண வந்த ஒரு பகுதியினர்

## 23-06-2018 அன்று 8ஆவது சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....



நெறியாளர்கள் கலியபெருமாள்
மற்றும் கார்த்திக்




ஜோஷிக்கா



வேரும் விழுதும் படைக்கும்
பவித்ரா மற்றும் அன்யா



நிகழ்ச்சியைக் காண வந்த
ஒரு பகுதியினர்



பிறந்தநாள் கொண்டாட்டம்



விருந்து உபசரிப்பு

## 14-07-2018 அன்று 9ஆவது சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....



காணொளி வழியாக ஶ்ரீயா



மேடையேறிய மாணவர்களுடன்



வேரும் விழுதும் படைக்கும்
துளசிமணி மற்றும் சம்ரிதா



சிறப்புரை வழங்கும்
உயர்திரு பூ.எல்லப்பன்



மேடையேறிய மாணவர்கள் மற்றும் பெரியவர்கள்



நிகழ்ச்சியைக் கண்டு களித்தவர்கள்

## 04-08-2018 அன்று பொங்கோல் கடற்கரையில் ஆலோசனைக்கூட்டம்...



இரண்டாவது ஆலோசனக் கூட்டத்தில்...



களிப்போடு விருந்து...

## 11-08-2018 அன்று 10ஆவது சந்திப்பிலிருந்து சில காட்சிகள்.....



சங்கீதப் பாடலோடு நந்திகா



பிரித்தீவ்



ஜோஷிக்கா



கிருஷவ்



நெறியாளர்கள் துளசிமணி மற்றும் பவித்ரா



சித்த மருத்துவக் குறிப்பு
வழங்கும் கவிஞர் சாவித்திரி

## 28-07-2018 அன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலை கழக வளாகத்தில் தலைவர்



சிங்கப்பூர் மண் கலந்து தஞ்சை மண்ணில்
மரம் நடுவதற்காக மண் ஒப்படைப்பு



மரம் நடு விழாவில் 'வாழ்வியல்
இலக்கியப் பொழில்' சார்பாக...

## 08-09-2018 அன்று 11ஆவது சந்திப்பில் சில காட்சிகள்.....



பாரதியாராக கிருஷவ்



இலக்கிய நாடகக்குழு 1 (நெருப்புடா...)
பிரித்திவ், ஜீவஜோதிகா, சம்ரிதா



ஔவையாராக ஜோஷிக்கா



இலக்கிய நாடகக்குழு 2
(வரும் ஆனா வராது) நந்திகா, விமல், அன்யா



வேரும் விழுதுமாக சவிதா மற்றும் பிரவிதா



சிறப்பு பார்வையாளர் முனைவர்
மா.இராஜிக்கண்ணு அவர்கள்



வாழ்வியல் இலக்கியப் பொழில் நடத்திய முதல் பட்டிமன்றம்

# ஊடகங்களில் வாழ்வியல் இலக்கியப் பொழில்



வெள்ளி 9 2 2018 | வாழ்வும் வளமும் | 9

## இலக்கியச் சொற்பொழிவு

சிராங்கூன் நார்த் அவென்யூ 2, சிராங்கூன் சமூக மன்றத்தில் உள்ள அரங்கில் நாளை மாலை 5.30 மணிக்கு 'வாழ்வியல் இலக்கியப் பொழில்' எனும் மாதாந்திர நிகழ்ச்சி நடைபெறும். சிறுவர்களுக்கான பல்சுவை நிகழ்ச்சி, சங்க இலக்கியப் பாடல்களுடன் உரையும் இடம் பெறும். தமிழகத்தின் திருவாரூரிலிருந்து வந்திருக்கும் புலவர் மு.சந்திரசேகரன் 'அகத்திணை' எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

4 ஆவது சந்திப்பு நாள்: 09-02-2018
நாளேடு: தமிழ் முரசு



## இன்று இலக்கியச் சந்திப்பு

சிராங்கூன் நார்த் அவென்யூ 2, எண் 10, சிராங்கூன் சமூக மன்றத்தின் தளம் 2ல் உள்ள அரங்கில் இன்று மாலை 5.30 மணிக்கு "வாழ்வியல் இலக்கியப் பொழில்" மாதாந்திர இலக்கிய சந்திப்பு நடைபெறும். சிறுவர்களுக்கான பல்சுவை நிகழ்ச்சி மற்றும் சங்க இலக்கியப் பாடல்களுடன் உரையும் இடம்பெறும்.


மகளிர் குழு சிறுபஞ்சமூலம், பழமொழி நானூறு, நான்மணிக்கடிகை, ஐங்குறுநூறு மற்றும் முதுமொழிக் காஞ்சி ஆகிய நூல்களில் இருந்து இலக்கியச் சிற்றுரைகள் ஆற்றுவர். மேல் விவரங்களுக்கு 92288544 என்ற எண்ணை அழைக்கவும்.

REX CARNIVAL CINEMAS DIGITAL - Tel:

7 ஆவது சந்திப்பு நாள்: 12-05-2018
நாளேடு: தமிழ் முரசு




6 ஆவது சந்திப்பு நாள்: 14-04-2018
நாளேடு: தமிழ் முரசு



## வாழ்வியல் இலக்கியப் பொழில்: இலக்கியச் சந்திப்பு

சிராங்கூன் நார்த் அவின்யூ 2, எண் 10, சிராங்கூன் சமூக மன்றத்தில், தளம் 2ல் 'theatrette' அரங்கில் இன்று மாலை 5.30 மணிக்கு "வாழ்வியல் இலக்கியப் பொழில்" மாதாந்திர நிகழ்ச்சியின் 7ஆவது சந்திப்பு நடைபெறும்.

சிறுவர்களுக்கான பல்சுவை நிகழ்ச்சி மற்றும் சங்க இலக்கியப் பாடல்களுடன் உரையும் இடம்பெறும். மகளிர் குழுவினர் இனியவை நாற்பது, நான்மணிக்கடிகை, முதுமொழிக்காஞ்சி ஆகிய நூல்களில் இருந்து இலக்கியச் சிற்றுரைகள் மற்றும் குறிஞ்சி திணை பற்றியும், சங்க இலக்கியத்தில் கல்வி பற்றியும் உரையாற்றுவர். சிறப்பு அங்கமாக "வேரும் விழுதும்" தாய்-சேய் இணைந்து படைக்கும் புதிய அங்கமும் இடம்பெறும். மேல் விவரங்களுக்கு 92288544 என்ற எண்ணை அழைக்கலாம்.

கருவுற்ற காட்டுப் பன்றி சாலை விபத்தில் மாண்டது

8 ஆவது சந்திப்பு நாள்: 23-06-2018
நாளேடு: தமிழ் முரசு

# ஊடகங்களில் வாழ்வியல் இலக்கியப் பொழில்

**சமூக நிகழ்ச்சிகள்**

11-08-2018 தமிழ் முரசு, பக்கம் 9

**வாழ்வியல் இலக்கியப் பொழில்**

'வாழ்வியல் இலக்கியப் பொழில்' மாதாந்திர நிகழ்ச்சியின் 10ஆவது சந்திப்பு சிராங்கூன் சமூக மன்றத்தில் வரும் இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான பல்சுவை நிகழ்ச்சி மற்றும் சங்க இலக்கியப் பாடல்களுடன் உரையும் இடம் பெறும். சிந்தாமணி, திரிகடுகம், முதுமொழிக்காஞ்சி ஆகிய நூல்களில் இருந்து மகளிர் குழுவினர் இலக்கியச் சிற்றுரைகளைப் படைக்கவுள்ளனர்.

சிறப்பு அங்கமான 'வேரும் விழுதும்' அங்கத்தில் தாய்–சேய் இணைந்து படைக்கும் உரையாடல் இடம்பெறும். மேல் விவரங்களுக்கு எ ல் ல . கி ரு ஷ் ண மூ ர் த் தி அவர்களை 92288544 என்ற எண்ணில் அழைக்கவும்.

10 ஆவது சந்திப்பு நாள்: 11-08-2018
நாளேடு: தமிழ் முரசு




வலைப்பக்கம்

DINAMALAR
National Tamil Daily

• உலக தமிழர் செய்திகள்

## சிங்கப்பூரில் புதிய அமைப்பு

பதிவு செய்த நாள்: நவ 30,2017 10:29

சிங்கப்பூர் சிராங்கூன் சமூக மன்றத்தில் " வாழ்வியல் இலக்கியப் பொழில் " என்ற புதிய அமைப்பு தொடங்கியது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் குத்து விளக்கேற்றி மங்கலகரமாகத் துவங்கிய இந்நிகழ்வில் பெரும்பாலும் சிறார்களே பங்குபெற்ற பல்சுவை அங்கங்கள் பல இடம் பெற்றன. ஜீவஜோதிகா நாட்டியத்தோடு சிறுவர் நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. ஸ்ரீயா ஸ்ரீராகவன் ஆத்திசூடி பாடலையும் கமலிகா ஔவையார் நல்வழியையும் ஆதி கார்த்திகேயன் பழமொழியையும் ஓதினர்.

சர்வினி விதையில்லாக் கத்தரிக்காய் என்ற கதை சொன்னார். அன்யா – ரக்ஷிகா நாட்டுப் புறப் பாடல்களையும் ஜீவஜோதி பாரதியார் பாடல்களையும் பாடினர். கிஷோர் பாரதி தாசன் கதைகளையும் ஜீவஸ்ரீ ஆத்திசூடி கதைகளையும் முரளிதரன் பரமார்த்த குருவும் சீடர்களும் என்ற கதையையும் ஹமுதேஷ் தெனாலிராமன் கதையையும் கிருஷ்ணதேவா சொர்கத்திற்கு ஒரு பயணம் என்ற கதையையும் கூறினர்.

ரிஷி கணேஷ் புதிர் போட்டார். கவின் நிலா பாரதியும் எழுச்சியும் என்ற தலைப்பில் சிற்றுரை ஆற்றினார். சந்தோஷ் சங்க இலக்கியங்களில் வாழ்வியல் நெறிகள் என்ற தலைப்பிலும் கவிஞர் ராஜசேகர் நீதி நூல்களில் வாழ்வியல் நெறிகள் என்ற தலைப்பிலும் உரையாற்றினர். ஏற்பாட்டாளர் கவிஞர் எல்ல.கிருஷ்ணமூர்த்தி அமைப்பின் நோக்கங்கள் பற்றி விளக்கினார். பவித்ரா கண்ணன் மற்றும் பிரம்மகுமார் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தனர்.

கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை ஆற்றினார். சுரேஷ் பாபு நன்றி நவில நிகழ்வு நிறைவு பெற்றது.

– நமது செய்தியாளர் வெ.புருஷோத்தமன்

# முதலாம் ஆண்டுவிழா அழைப்பு மடல்

**வடிவமைப்பில் உதவி : திருமதி தீபிகா வினேஷ் மனோ**



# இதய மலரில் இணைந்த நன்றித் துளிகள்

காரண காரணிகள் பலவுண்டு
காலத்தோடு வாழ்தல் நன்று
கற்றறிந்த கருத்துடன் வாழ
கசப்பான மருந்தினைக் கொளல் நன்றே !

வாழ்வியல் இலக்கியப் பொழில் அமைப்பில்
கட்டுப்பாடுகள் ஏராளம், எனினும்
கலையார்வம் கொண்டோர் நாளும்,
கனிந்து வர கவனமுடன் ஏற்பர் கூடியே !

இந்த ஆண்டுமலர் மலர, தம் இதய மலர் மலர்ந்த தருணத்தில் நன்கொடை வழங்கியும், விளம்பரம் செய்தும், பல்வேறு அங்கங்களைச் சிறப்புடன் நடத்த, பல்வேறு ஒத்திகைகள் நடத்த, நேரம் ஒதுக்கிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், குறித்த நேரத்தில் இந்த ஆண்டுமலர் அச்சிட்டு வழங்கிய சத்யன் லே-அவுட் நிர்வாகத்தார், கடந்த ஓராண்டாக மாதாந்திர நிகழ்ச்சிகளை நடத்த இடம் கொடுத்து வரும் சிராங்கூன் சமூக மன்ற அதிகாரிகள், கடந்த ஓராண்டாக நடந்த நிகழ்ச்சிகளில் பரிசுப் பொருட்கள், கோப்பைகள், நினைவுப் பரிசுகள், பலகார வகைகள், குடிநீர், இரவு உணவு செலவுகளை ஏற்றுக்கொண்ட வாழ்வியல் இலக்கியப் பொழில் குடும்பத்தினர் என அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

நன்றியுடன்...

**வாழ்வியல் இலக்கியப் பொழில்**



ஆண்டுவிழா சிறக்க வாழ்த்துகிறோம்
With Best Complements
SHOP FOR ALL YOUR
HOUSEHOLD ITEMS
ONLY AT Jothi's
Distributed By
JOTHI STORE & FLOWER SHOP
JOTHI
SINCE 1960
No.1, Campbell Lane, Singapore 209882,
Tel: 6338 7008 Fax: 6338 0070
Email: jothistore@singnet.com.sg
website: www.jothi.com.sg
Follow us on



ஆண்டுவிழா சிறக்க வாழ்த்துகிறோம்
With Best Complements
Pure Vegetarian
Bangalore Iyengar Bakery
No.79, Rangoon Road, Singapore - 218 366
Tel : +65 6392 5785
E-mail: bibakery@outloo.com

# வாழ்வியல் இலக்கியப் பொழில் - சிங்கப்பூர்









ISBN 978-981-11-9056-8

978-981-11-9056-8